இரகசியப் புதைகுழி விசாரணைகளைப் புரிந்துகொள்ளல்: காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான வழிகாட்டி

மிராக் றஹீம்

இரகசியப் புதைகுழி விசாரணைகளைப் புரிந்துகொள்ளல்: காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான வழிகாட்டி

மிராக் றஹீம்

மிராக் ரஹீமினால் கருத்துருவாக்கம்
மற்றும் எழுத்தாக்கம் செய்யப்பட்டது

ISBN 978-624-5545-23-0
முதற் பதிப்பு 2023
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.
ஆசிரியரின் அல்லது வெளியீட்டாளரின்
அனுமதியின்றி இப்புத்தகத்தின்
எந்தவொரு பகுதியும் எந்தவொரு வடிவத்திலும்
மீள வெளியிடப்பட முடியாது. அனுமதிக்கான
வேண்டுகோளுக்கு மிராக் ரஹீமை
mirakraheem@yahoo.com எனும் மின்னஞ்சல்
முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அட்டை மற்றும் பக்க வடிவமைப்பு:
சன்னி பெரேரா
துலன எத்துகல

சிங்கள மொழிபெயர்ப்பு:
டொக்டர் கங்கா ரஜினி திசாநாயக்க

தமிழ் மொழிபெயர்ப்பு:
மொஹமட் பிக்ரி

பதிப்பு:
டிரெக்ட் பிரின்டெர்ஸ்

வெளியீட்டாளர்

LAW & SOCIETY TRUST

அனுசரணை:

FAFG
FUNDACIÓN DE ANTROPOLOGÍA
FORENSE DE GUATEMALA

உள்ளடக்கம்

- இந்த வழிகாட்டியின் நோக்கம் என்ன? 01
- தேடல் 03
- குடும்பங்கள் மற்றும் தேடல் 04
- இரகசியப் புதைகுழிகள் என்றால் என்ன ? 05
- இரகசியப் புதைகுழி விசாரணைகளில் உள்ள சவால்கள் 07
- இலங்கையில் விசாரணைகள் 08
- இரகசியப் புதைகுழி விசாரணைகள் உலகளாவிய ரீதியில் எவ்வாறு முன்னேற்றமடைந்துள்ளன? 09
- இரகசியப் புதைகுழி விசாரணையின் கட்டங்கள் என்ன? 11
- இரகசியப் புதைகுழி விசாரணையின் கட்டங்கள்
    - கண்டுபிடித்தல் 13
    - அறிக்கையிடல் 14
    - அகழ்தல் 15
    - மீண்டும் தோண்டியெடுத்தல் 16
    - பகுப்பாய்வு 17
    - அடையாளப்படுத்தல் 18
    - எச்சங்களைக் கையளித்தல் 20
- குடும்பப் பங்கேற்பின் முக்கியத்துவம் 21
- விசாரணைச் செயன்முறையின் போதான உளசமூகச் சவால்கள் 23
- மூலங்கள் 24
- ஏற்புரை

இந்த வழிகாட்டியின் நோக்கம் என்ன?

காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர்களுக்கு இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணைச் செயன்முறை தொடர்பான ஓர் அடிப்படைப் புரிதலை வழங்குவதற்காகவே இந்த வழிகாட்டி எழுதப்பட்டுள்ளது. செயற்பாட்டாளர்கள், ஆற்றுப்படுத்துனர்கள், சட்டத்தரணிகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் போன்ற இக்குடும்பங்களுடன் பணியாற்றும் ஏனைய நபர்களும் இச்செயன்முறையினைப் புரிந்துகொண்டு விளக்குவதற்கு இந்த வழிகாட்டி பயன்மிக்கதாக அமையலாம்.

இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணை என்பது சிக்கலானதும் தொழில்நுட்ப அம்சங்கள் கொண்டதுமான ஒரு செயன்முறையாகும். காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் விசாரணைச் செயன்முறைக்கு உதவ விரும்பலாம் அல்லது விசாரணைச் செயன்முறையில் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகிப்பதற்காக அவர்கள் அழைக்கப்படலாம். இலங்கையில், இவ்வாறான ஒரு செயன்முறையினை விளக்கும் தகவல்கள் தற்போது இல்லாதிருக்கின்றன. குறிப்பாக, இவ்வாறான ஒரு விசாரணையின் போது தாம் எவற்றினைக் கையாள வேண்டியிருக்கும் என்பதை எதிர்பார்ப்பதற்குத் காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உதவுவதற்குத் தகவல்கள் இல்லாதிருக்கின்றன. இவ்வாறான ஒரு நிலைமைக்குத் தயாராவதற்காக இக்குடும்பங்களுக்கு உதவுவதற்குரிய தகவல்களை வழங்குவதற்கே இந்த வழிகாட்டி முயற்சிக்கின்றது.

இரகசியப் புதைகுழிகள் எனும் விடயம் குடும்பங்களுக்கு மிகவும் வலிமிக்க ஒரு விடயமாகும். வலிந்து காணமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர்கள் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய முடிவான தகவல்களுக்காகக் காத்திருக்கின்ற காரணத்தினால், வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பது அவர்களில் தனித்துவமான தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு குறிப்பிட்ட குற்றச்செயலாக உள்ளது.

தமது அன்புக்குரியவர்களைத் தேடுவதற்கும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கும்



குடும்பங்கள் அவர்களால் இயலுமான அனைத்தையும் பொதுவாகச் செய்துள்ளன. உண்மையை அவர்கள் தேடினாலும் கூட, தமக்கு எதை அறியக் கிடைக்கும் என்பது பற்றிய அச்சமும் அவர்களுக்கு இருக்கலாம் காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரயும் தேடுவதன் ஒரு கூறு மாத்திரமே இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணை என்பதையும் ஆனால் இதனை யாராலும் புறக்கணிக்க முடியாது என்பதையும் உரிமைகள் அடிப்படையிலான கட்டமைப்பினைப் பின்பற்றும் இந்த நூல் அங்கீகரிக்கின்றது.

குடும்ப உறுப்பினர்கள் இந்த நூலை நேரடியாக வாசிக்கையிலும் அல்லது வேறொரு நபர் இந்த நூலில் உள்ள தகவல்களை அவர்களுடன் பகிர்கையிலும் இந்த நூலின் உள்ளடக்கம் அக்குடும்பத்தினர் மத்தியில் கடினமான கேள்விகளையும் சிந்தனைகளையும் உணர்வுகளையும் எழுப்பலாம். இரகசியப் புதைகுழிகள் பற்றிக் கலந்துரையாடுவது இலகுவானதாக இல்லாதிருக்கலாம் என்பதையும் குடும்பத்தினர் அதற்குத் தயாராக இருக்கையிலும் அவர்களைச் சுற்றி நம்பிக்கைக்குரிய உதவி இருக்கையிலும் மாத்திரமே அவ்வாறு கலந்துரையாட வேண்டும் என்பதையும் குடும்ப உறுப்பினர்கள் அறிந்திருப்பது முக்கியமானதாகும்.

‘குடும்பம்’ எனும் சொற்பதம் பொதுவாக ‘இரத்த உறவினர்கள்’ என்றே சமூக நியமங்கள் மற்றும் சட்ட வரைவிலக்கணங்கள் ஆகியவற்றில் காணபடுகின்றது என்பதை இந்த நூல் ஏற்றுக்கொள்கின்றது. காணாமற் போனவர்கள் நெருக்கமான முறையில் உணர்வு ரீதியான பிணைப்பினையும் சமூகப் பிணைப்பினையும் கொண்டிருந்த நெருங்கிய நண்பர்கள், காதல் துணைகள் மற்றும் முன்னாள் வாழ்க்கைத் துணைகள் உள்ளிட்ட ஏனைய நபர்களும் இருக்கலாம் என்பதையும் இந்த நூல் ஏற்றுக்கொள்கின்றது. காணாமற் போனவர்கள் தொடர்பான முக்கியமான தகவல்கள் சிலவற்றினை இந்த நபர்கள் கொண்டிருக்கலாம் என்பதுடன் காணாமற் போனதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இவர்களும் கஷ்டப்படலாம்.

காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் எதிர்நோக்கும் அசாதாரணமான சவால்களைத் தாண்டி, அவர்களின் விடாமுயற்சியினாலும் தைரியத்தினாலும் உலகின் ஏனைய பகுதிகளில் காணாமற் போனவர்களைத் தேடுவதில் ஈடுபட்டுள்ள நிபுணத்துவமுடைய அமைப்புக்களின் பணியினாலும் இந்த நூல் அகத்தூண்டுதல் பெறுகின்றது.

பயன்படுத்தப்பட்டுள்ள சொற்பதங்கள்

இந்த நூலில் மேற்கொண்டு விபரிக்கப்பட்டுள்ளவாறு, பல்வேறு வகையான பாரிய புதைகுழிகள் காணப்படுகின்றன: இயற்கை அனர்த்தங்களுடன் தொடர்புடையவை, வரலாற்று ரீதியான புதைகுழிகள் மற்றும் காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோருடன் தொடர்புடையவை. பாரிய அளவில் இடம்பெற்ற மோதல்களின் போது ஆட்கள் காணாமல் போனமை தொடர்பாகவும் (1983 முதல் 2009 வரையான உள்நாட்டு யுத்தம் மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதி, 1971 மற்றும் 1987 – 1990 காலப்பகுதியில் இடம்பெற்ற ஜேவிபி கிளர்ச்சிகள் மற்றும் கலவரங்கள் போன்றவை) 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட் களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்தின் பிரகாரம் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல் தொடர்பாகவும் இந்த நூல் கவனம் செலுத்தும். மிக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் ஒன்று அல்லது இரண்டு தனிநபர்களின் உடல் எச்சங்களைக் கொண்டிருந்த அதேவேளை பாரிய புதைகுழி என்பது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்டவர்ளின் உடல்களைக் குறிப்பதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதால், இந்த நூல் ‘இரகசியப் புதைகுழிகள்’ என்பதையே பிரதான சொற்பதமாகப் பயன்படுத்தும்.

‘காணாமல்போனோர்’ மற்றும் ‘காணாமல் ஆக்கப்பட்டோர்’ ஆகிய சொற்பதங்களை இந்த நூல் தனித்துவமான சொற்பதங்களாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், இச்சொற்பதங்கள் ஒன்று மற்றொன்றுக்கு பதிலாக இந்த நூலில் பயன்படுத்தப்படவில்லை. ‘காணாமல்போனோர்’ எனும் சொற்பதம் பொதுவாக மனிதநேய அமைப்புக்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் இது அதிகமான சந்தர்ப்பங்களில் ஒரு ‘நடுநிலையான’ சொற்பதமாகவே பயன்படுத்தப்படுகின்றது. இச்சொற்பதம், மோதலில் ஈடுபட்டுள்ளவர்களையும் (நடவடிக்கைகளின் போது தொலைந்து போனவர்கள் எனும் சொற்பதம் பொதுவாக பாதுகாப்புப் படையினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது) அதில் தொடர்புறும் சாதாரண மக்களையும் இயற்கையான மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் மற்றும் புலம்பெயர்வுகளில் கணக்கிலிடப்படாத நபர்களையும் உள்ளடக்கும் பரந்த சூழ்நிலைகளின் தொகுதியினை உள்ளடக்குகின்றது. ‘காணாமல் ஆக்கப்படல் ’என்பது ‘வலிந்து காணாமலாக்கப்படோர்’ எனும் சர்வதேச ரீதியாக அடையாளம் காணப்பட்டுள்ள குற்றச்செயலுடன் தொடர்புடையதாகும். அரசு அல்லது அரசுடன் இணைந்த குழுக்கள் கடத்தலிலும் தடுத்துவைப்பிலும், இறுதியில், குறிப்பிட்ட நபரின் தலைவிதியிலும் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சம்பந்தப்படுவதையும் சம்பந்தப்பட்டவர்கள் இவற்றினை எல்லாம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றமையும் இதில் அடங்குகின்றது.

இலங்கையில், குடும்பங்களின் வித்தியாசமான தொகுதியினர் அவர்களின் விருப்பத்துக்குரிய சொற்பதங்களைக் கொண்டுள்ளனர். எனவே, ‘காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள்’ எனும் சொற்றொடரினை இந்த நூல் பயன்படுத்துகின்றது.

தேடல்

தேடலின் பிரதான குறிக்கோள் காணாமல் போனவரை உயிருடன் கண்டுபிடிப்பதாகும். இது, அந்த நபர் கடைசியாக எப்போது காணப்பட்டாரோ (அப்போதுதான் அவர் கடத்தப்பட்டிருக்கலாம்) அப்போதில் இருந்து அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பதையும் அவர் எங்கே தடுத்துவைக்கப்பட்டார் (இது பல நாட்களாக அல்லது வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்ட பல இடங்களைக் குறிக்கலாம்;) என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பதையும் அவரைக் கடைசியாகக் கண்ட பதிவினை அல்லது அவரின் ஒலிப் பதிவினையும் (இதனைக் கண்ணால் கண்டவர்கள் கூறுவதை வைத்து உறுதிப்படுத்தலாம், உதாரணமாகத் தடுப்பு முகாமின் காவலாளிகள்) சம்பந்தப்படுத்துகின்றது.

காணாமல் போனவரை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுவதென்பது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசின் கடப்பாடாகும். வலிந்து காணாமற்ஆக்கப்படுதலில் இருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்தில் இலங்கை அரசு 2016 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டு அதனுடன் தொடர்புடைய சட்டத்தினை 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றியுள்ளது. எனவே, காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உள்நாட்டுக் கடப்பாட்டினையும் சர்வதேசக் கடப்பாட்டினையும் இலங்கை அரசு கொண்டுள்ளது. காணாமல் ஆக்கப்படல் என்பது அதன் தன்மையில் தாமே, அதாவது: நபர் ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டவராகவே தொடர்ந்தும் இருக்கும் நிலையில், தொடர்கின்ற ஒரு வன்முறையினைக் குறிக்கின்றது. எனவே, அந்தத் காணாமல் ஆக்கப்பட்ட நபர் இருக்குமிடத்தினைக் கண்டுபிடிக்கும் கடப்பாடு தொடர்ந்தும் அரசைச் சார்ந்ததாகவே இருக்கின்றது.

காணாமல் ஆக்கப்படல் இலங்கையில் சகல பிரதான இன - மதச் சமுதாயங்களையும் ஒவ்வொரு மாவட்டத்தினையும் பாதித்துள்ளது. காணாமலாக்கப்படோரின் மொத்த எண்ணிக்கை தொடர்பான உத்தியோகபூர்வ எண்ணிக்கை எதுவும் இல்லாதிருக்கின்றது. ஆனால், வலிந்து காணாமலாக்கப்படுதல் அல்லது தம் ஒப்புதல் இன்றி காணாமலாக்கப்படல் பற்றிய ஐநா செயற்குழுவினால் ஆகக் கூடுதலாகக் காணாமலாக்கப்படல் நிகழ்ந்த இரண்டாவது நாடாக இலங்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் 2020 ஆம் ஆண்டில் 19,013 வழக்குகளின் எண்ணிக்கையினைக் கொண்ட பூரணமற்ற பட்டியல் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளது. ஆனால், முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களின் பட்டியல்களுடன் இது இன்னும் ஒப்பிடப்பட்டு ஒருங்கிணைக்கப்படவில்லை. காணாமலாக்கப்படல் இலங்கைச் சமூகத்தில் ஒரு வடுவினை ஏற்படுத்தியுள்ளதுடன் ஏதாவது செய்தி கிடைக்காதா எனப் பல வருடங்களாகத் தொடர்ந்தும் காத்திருக்கும் காணாமல் போனவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டவரினதும் குடும்பங்கள் மீதும் காணாமல் ஆக்கப்பட்டோருடன் தொடர்புடையவர்கள் மீதும் இது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது..

இலங்கையில் பிரதான விசாரணை அதிகார அமைப்புக்களாலேயே தேடல் மேற்கொள்ளப்படுகின்றது - பொலிஸ் மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம், ஆனால், முப்படைகள், அவற்றின் சம்பந்தப்பட்ட விசாரணை அமைப்புக்கள் (உதாரணமாக, இராணுவத்தினைப் பொறுத்த அளவில் இராணுவப் பொலிஸ்), சட்டமா அதிபர் அலுவலகம், நீதித்துறை மற்றும் மிக அண்மையில், காணாமற்போனோருக்கான அலுவலகம் உள்ளிட்ட அரசின் ஏனைய பிரிவுகளையும் இது சம்பந்தப்படுத்துகின்றது. கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக, காணாமல் போனவர்களைப் பற்றி விசாரிப்பதற்காகப் பல்வேறு அரசாங்கங்களினால், விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் பிற குழுக்கள் போன்ற குறைந்தது 10 தற்காலிக நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அதிகமான சந்தர்ப்பங்களில், காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் இருக்கும் இடங்கள் பற்றிய சான்றுகளை வழங்குவதற்கு அரச நிறுவனங்கள் பெருமளவிற்குத் தவறியுள்ளன.

குடும்பங்களும் தேடலும்

இலங்கையில் மோதல்களின் போதும் அரசியல் வன்முறையின் போது இடம்பெற்ற சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் மரணங்களின் பயங்கரமான யதார்த்தத்தின் காரணமாக, காணாமல் போன நபர் அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நபர் இனிமேலும் உயிருடன் இருக்க மாட்டார் என்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றது. இது குடும்பங்களின் மிக பயங்கரமான அச்சமாக இருந்தாலும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்கின்ற பதில்களை இரகசியப் புதைகுழிகள் வைத்திருக்கலாம். இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணையானது காணாமல் ஆக்கப்பட்டோரின் தேடலின் புறக்கணிக்கப்பட முடியாத இன்றியமையாத பாகமாக உள்ளது. இரகசிய புதைகுழிகளிருந்து இருந்து சேகரிக்கப்படும் தகவல்கள் காணாமல் போனவரின் தகவல்களுடன் அவற்றினைப் பொருத்திப் பார்ப்பதற்கு உதவும் என்பதுடன் துக்கம் அனுஷ்டிப்பதற்காகவும் இறுதிச்சடங்குகள் நடத்துவதற்காகவும் உடல் எச்சங்களைக் கையளிப்பதையும் அனுமதிக்கின்றது.

அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் மற்றும் எப்போது இறந்தார்கள் என்பது பற்றிய சில வினாக்களுக்கான விடைகளையும் குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் யாராக இருக்கலாம் என்பது பற்றிய வினாக்களுக்கான விடைகளையும் கூட அவை வழங்கலாம். இந்த பதில்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய குடும்பங்களின் புரிதலுக்கு அத்தியாவசியமானதாகும். விசாரணையின் போது சேகரிக்கப்படும் சான்றுகள் காணாமல் ஆக்கப்படல் எனும் குற்றத்திற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் என்ன நடந்தது என்பது பற்றிய ஒரு பகிரங்க விபரத்தினை வழங்குவதற்கும் இன்றியமையாதவையாக இருக்கலாம்.

காணாமல் போனவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்பங்கள் அவர்களின் அன்புக்குரியவர்களைத் தேடுவதில் ஒரு பிரதான வகிபாத்திரத்தினை வகித்து வருகின்றன. பொலிசாரிடமும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களிடமும் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக, அவர்கள் சில வேளைகளில் தேடலை அவர்களாகவே நடத்த வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. குற்றத்தினை நிகழ்த்தியதாகச் சந்தேகிக்கப்படுபவர்களிடம் இருந்து தமது அன்புக்குரியவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் பொலிஸ் நிலையங்களுக்கும் இராணுவ முகாம்களுக்கும் துணை இராணுவ முகாம்களுக்கும் ஆயுதம்தாங்கிய குழுக்களின் முகாம்களுக்கும் அரசியல் அலுவலகங்களுக்கும் செல்வதற்காக நாடு முழுவதும் உள்ள இவ்வாறான குடும்பங்கள் நெடுந்தூரம் பயணம் செய்துள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அரச நிறுவனங்கள், செஞ்சிலுவை சங்கம் (ICRC) உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள், சமாதானக் குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பின்தொடரல் மேற்கொள்ளக் கூடிய எந்த நிறுவனத்திலும் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு அவர்கள் முயன்றுள்ளனர். தமது உயிர்களுக்கான அச்சுறுத்தலையும் துன்புறுத்தலையும் சில வேளைகளில் நேரடி வன்முறையினையும் பொருட்படுத்தாது குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களைத் தொடர்ந்தும் தேடிவருகின்றனர். தமது அன்புக்குரியவர்களின் நிலை பற்றிய தகவல்களை

வழங்கி அதற்கு பதிலாகத் தம்மிடம் இருந்து இலஞ்சங்களைக் கறக்கும் நபர்களையும் குடும்பங்கள் கையாள வேண்டியுள்ளது. சில குடும்பங்கள் மனுதாரர்களாக முன்வந்துள்ளனர். காணாமலாக்கப்பட்ட நபர்களை ஆஜர்படுத்துவதற்கு அதிகார அமைப்புக்களை நிர்ப்பந்திக்குமாறு நீதிமன்றங்களை வேண்டி ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். குடும்பங்கள் அவற்றின் நலன்களைச் சிறந்த முறையில் பிரதிநிதித்துவம் செய்வதற்காகக் குழுமங்களை உருவாக்குவதற்காக ஒன்று சேர்ந்துள்ளனர். தமது முயற்சிகளை அதிகரிப்பதற்காக இக்குடும்பங்கள் தம்மை ஒழுங்கமைத்துள்ளதுடன், உண்மையினையும் நீதியினையும் கோரி ஆர்ப்பாட்டங்களிலும் சிவில் சமூகத்துடனும் அரசியல் முன்னெடுப்புக்களுடனும் இணைந்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில், காணாமலாக்கப்பட்ட நபர்கள் பற்றிய எவ்விதமான நம்பத்தகுந்த தகவலையும் தேடல் வழங்காத சந்தர்ப்பங்களில், ஜோசியக்காரர்கள் போன்ற ஏனைய முறைகளைப் பயன்படுத்தக் குடும்பத்தார் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

தகவல்கள் எவற்றினையும் அறியாதிருக்கும் இச்சூழ்நிலை, குறிப்பாகப் பல வருடங்கள் நீடிக்கும் இச்சூழ்நிலை, அடுத்த கட்ட நடவடிக்கையினை எடுப்பதைக் குடும்பங்களுக்குக் கடுமையாக்குகின்றது. சில குடும்பங்கள் மிக மோசமான விடயத்தினைப் பற்றிய அச்சத்தினைக் கொண்டிருந்தாலும் கூட, தம் அன்புக்குரியவர் எங்கோ ஓரிடத்தில் உயிருடன் இருக்கின்றார் என்ற நம்பிக்கையினைத் தக்கவைத்துக் கொள்கின்றன. நம்பத்தகுந்த தகவல்கள் இல்லாத காரணத்தினாலும், போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் அல்லது நாளாந்த வாழ்வின் தேவைகள் காரணமாகவும் சில குடும்பங்கள் முனைப்பான தேடலைத் தற்காலிகமாக இடைநிறுத்தலாம் என்றாலும் தம் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவே இக்குடும்பங்கள் விரும்புகின்றன. பல வருடங்கள் என்ன, தசாப்தங்களே கூடக் கடந்து சென்றிருந்தாலும், நாடு முழுவதும் உள்ள காணாமல் போனவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்பங்களின் மத்தியில் உண்மையினை அறிவதற்கான கோரிக்கையே தொடர்ந்தும் வலுவான நோக்கமாகக் காணப்படுகின்றது.

இரகசியப் புதைகுழிகளை கண்டுபிடிப்பது அல்லது அவற்றினைப் பற்றி விசாரணை நடத்துவது குடும்பங்களைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியமான நிகழ்வாகும் ஏனெனில் தம் அன்புக்குரியவர் அங்கிருந்து கண்டுபிடிக்கப்படலாம் என அக்குடும்பங்கள் அச்சப்படலாம்.

இரகசியப் புதைகுழிகள் யாவை?

மனித உடல எச்சங்கள் இரகசியமாகப் புதைக்கப்பட்டுள்ள அல்லது தூவப்பப்பட்டுள்ள மேலும் புதைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய துல்லியமான அடையாளம் உறுதிப்படுத்தப்படாத இடமே இரகசியப் புதைகுழியாகும் (பொதுவாக பாரிய மனிதப் புதைகுழி எனக் குறிப்பிடப்படுகின்றது). அதிகமான சந்தர்ப்பங்களில், இவை அடையாளமிடப்படாத புதைகுழிகளாகக் காணப்படுவதுடன் இவை பொது மயானங்களிலோ அல்லது ஏனைய ஒதுக்கப்பட்ட சேமக்காலைகளிலோ காணப்படுவதில்லை. இரகசியப் புதைகுழி என்பதற்கான வரைவிலக்கணத்தின் படி அவ்வாறான புதைகுழிகளின் அமைவிடம் அறியப்படாத ஒன்று என்பதே உணர்த்தப்படும் விடயமாகும். ஆனால் ஏனைய சில சந்தர்ப்பங்களில் அவ்வாறான புதைகுழிகள் காணப்படுவதாக வதந்திகள் வரலாம் என்றாலும் அதனை நிரூபிப்பதற்கான அகழ்வுகள் செய்யப்படாமல் இருக்கலாம் .

இலங்கைச் சமுதாயங்கள் இறப்புக்கள் தொடர்பாகவும் சடலம் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஆழமாக வேரூன்றியுள்ள சடங்குகளைக் கொண்டுள்ள காரணத்தினால், அறியப்படாத அமைவிடத்தில் மனித உடல் எச்சங்களைக் கண்டுபிடிப்பதென்பது சந்தேகத்தினை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே



காணப்படுகின்றது. எனவே, ஒரு ‘சாதாரண புதைகுழியில் ‘ ஒரு சவப்பெட்டியில், கவனமாக அல்லது பாதுகாப்பான வேறு முறையில் இடப்பட்டுப் புதைக்கப்பட்ட ஒரு சடலத்தினை ஒருவர் எதிர்பார்க்கலாம் என்பதுடன் பொதுவாக ஒவ்வொரு சடலமும் தனித்தனியாகவே புதைக்கப்படுகின்றது. பாரிய மனிதப் புதைகுழிகளோ சடலங்கள் வெவ்வேறு நிலைகளில் காணப்படலாம் அல்லது ஒரு சடலத்தின் மீது கூட இன்னொரு சடலம் அடுக்கப்பட்டிருக்கலாம்.

கடந்த ஐந்து வருடங்களில், வருடாந்தம் குறைந்தது ஒரு இரகசியப் புதைகுழியாவது கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக ஊடகங்கள் அறிக்கையிட்டு வருகின்றன. இவ்வாறான சம்பவங்களில், பொதுவாக ஒன்றிரண்டு எலும்புக்கூடுகளே கண்டுபிடிக்கப்படுகின்றன. மாத்தளை (2012 இல் கண்டுபிடிக்கப்பட்டது), மன்னார் சதொச (2018 இல் கண்டுபிடிக்கப்பட்டது), மற்றும் கொக்குத்தொடுவாய் (2023 இல் கண்டுபிடிக்கப்பட்டது) போன்ற வேறு அரிதான சந்தர்ப்பங்களில், பல சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதுடன் அப்புதைகுழிகளைப் பாரிய மனிதப் புதைகுழிகள் என விபரிக்க முடியும்.



இரகசியப் புதைகுழிகளில் எவற்றினைக் கண்டுபிடிக்க முடியும்?

இரகசியப் புதைகுழியில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தனிநபர்களின் சடலங்கள் காணப்படலாம். சடலங்களை அடக்கம் செய்த பின்னர் காலப்போக்கில், மனிதத் திசுக்கள் (தோல், தசைகள், மற்றும் உறுப்புக்கள் போன்றவை) அழுகத் தொடங்கி எலும்புகளே ஈற்றில் எஞ்சுகின்றன (எலும்புக்கூடாதல்). அழுகலடையும் வீதம் மண்ணின் ஈரப்பதன் மற்றும் அமிலத்தன்மை/ காரத்தன்மை போன்ற காரணிகளைச் சார்ந்து பெருமளவுக்கு மாறுபடலாம்.

விசாரணைகளைப் பொறுத்த அளவில், உடல் எச்சங்கள் மாத்திரம் முக்கியமானவையல்ல. உடல் எச்சங்களுடன் சேர்ந்து காணப்படுபவையும் முக்கியமானவையாகும். இவற்றுள் இறந்த நபரின் ஆடைகள், ஆபரணங்கள், அல்லது பணப்பை போன்ற தனிப்பட்ட பொருட்கள் உள்ளடங்கலாம் (இவற்றுள் தனிப்பட்ட அடையாளப்படுத்தல் ஆவணங்கள் அடங்கலாம்). உடல் எச்சங்களில் இருந்து பெறப்படும் உயிரியல் தகவல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையென எப்போதும் கருதப்பட்டாலும், இவை அடையாளப்படுத்தலில் மிகவும் பயன்மிக்கதாக இருக்கலாம்.

ஆடையணிகலன்களும் வேறு துணைப் பொருட்களும் குறிப்பிட்ட புதைகுழி சார்ந்த இடங்களின் திகதியினை அறிவதற்கு உதவும். உதாரணமாக, ஆடையணிகலன்களில் இலாஸ்டிக் இருந்தால் அது நவீன காலத்திற்குரியதென்பதைக் கூறலாம். மண் தட்டுக்கள் போன்ற புதைகுழியைச் சுற்றியுள்ள அமைவிடத்தினை மதிப்பிடுவது இடம் பற்றிய திகதியை வழங்குவதற்கு உதவலாம். தோட்டாக்கள் போன்றவையும் புதைகுழியில் இருந்து கண்டுபிடிக்கப்படலாம். இது குறிப்பிட்ட நபர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை விளக்குவதற்கு உதவலாம். புதைகுழி அமைந்துள்ள இடங்களுக்குச் சடலங்கள் எவ்வாறு வந்து சேர்ந்தன என்பதை விளக்கக்கூடிய ஏனைய முக்கியமான தகவல்களை அந்த இடங்கள் கொண்டிருக்கலாம்.

இரகசியப் புதைகுழி பற்றிய விசாரணையில் காணப்படும் சவால்கள்

இரகசியப் புதைகுழிகளில் உடல்கள் புதைக்கப்படுவதால் அவை தொடர்பான விசாரணை சிக்கல்மிக்கதாக அமைகின்றது. இரகசியப் புதைகுழிகள் அவற்றின் தன்மையின் காரணமாக உண்மைகளை மறைப்பவையாகவே கருதப்படுகின்றன. சட்டத்திற்குப் புறம்பான கொலைகளைப் பொறுத்த அளவில் வலிந்து காணாமலாக்கப்படுதலில் நிகழும் சம்பவங்களில், குற்றச்செயலை நிகழ்த்தியவர்கள் அவர்களின் குற்றச்செயலின் சான்றுகளாக இருக்கும் பாதிக்கப்பட்டவர்களின் உடல் எச்சங்களை மறைப்பதற்கே பொதுவாக முயற்சிக்கின்றனர். இவை கண்டுபிடிக்கப்படுவதற்குப் பல வருடங்கள் அல்லது பல தசாப்தங்கள் கூட எடுக்கலாம். இலங்கையில், இரகசியப் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட உடல் எச்சங்களில் அதிகமானவை எலும்புக்கூடுகளாகவே காணப்படுகின்றன.

சில பாரிய மனிதப் புதைகுழிகளில், சடலங்கள் ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்படலாம். ஒரு தனிநபரின் உடல் எச்சத்தில் இருந்து மற்றொரு தனிநபரின் உடல் எச்சத்தை இலகுவாகப் பிரித்தெடுப்பதை இது கடினமாக்குகின்றது. கொல்லப்பட்ட பலரையும் கொண்டுள்ள புதைகுழியினைத் தோண்டுவது சிக்கல்மிக்க பணியாகும் என்பதுடன் இது மனித எச்சங்களுக்குச் சேதத்தினைக் கூட ஏற்படுத்தலாம். ஒரு தனிநபரின் எலும்புகள் மற்றொரு தனிநபரின் எலும்புகளுடன்

சேர்ந்து கலந்துவிடாத வகையில் அவற்றினைக் கவனமாக அகற்றுவதற்கு முன்னர் சகல உடல் எச்சங்களையும் நிபுணர்கள் கவனமாக வெளிப்படுத்துவதை இது தேவைப்படுத்துகின்றது. சேர்ந்து கலப்பது என்பது கொல்லப்பட்ட பலரினதும் எலும்புகள் கலப்பதாகும். இது, தனிப்பட்ட அடையாளப்படுத்தலின் சாத்தியத்தினை மிகவும் கடினமானதாக ஆக்கலாம் என்பதுடன் டிஎன்ஏ பரிசோதனையினைக் கூட இது கடினமாக்கலாம்.

கொலை செய்யப்பட்ட சடலம் கொலை நடந்த சில மணிநேரங்களில் கண்டுபிடிக்கப்பட்டு அக்கொலை நடந்த இடம் தொடர்பாக விசாரணை நடத்துவதை விட இரகசியப் புதைகுழி தொடர்பான விசாரணை பொதுவாக மிகவும் சிக்கல்மிக்கதாகும். சடலம் சிறந்த நிலையில் கண்டுபிடிக்கப்படும் கொலைச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவரைக் கண்டுபிடிப்பது இலகுவானதாக இருக்கலாம். இதனைக் கொலை செய்யப்பட்டவரின் உடல் அடையாளங்களில் இருந்து கண்டுபிடிக்க முடியும். உதாரணமாக, கொல்லப்பட்டவரின் இடது கன்னத்தில் மச்சம் இருந்தால் மேலும் உடலின் ஏதாவது குறிப்பிட்ட பாகத்தில் பச்சைகுத்தியிருத்தல் போன்ற அடையாளப்படுத்தும் குறிகள் இருந்தால் அடையாளப்படுத்தல் இலகுவாக இருக்கும். கொல்லப்பட்டவரின் முகத்தினைப் புகைப்படம் எடுப்பதுவும் அடையாளப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

இவ்வாறான கொலைச் சம்பவத்தில், சடலம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் பாதுகாக்கப்பட்டு அது குற்றச்செயல் நிகழ்ந்த இடமாக அடையாளமிடப்படலாம். மாறாக, இரகசியப் புதைகுழிகள் அகழ்வினால் பிரதானமாக மாற்றப்படும் என்பதுடன் இதனால் சூழமைவுடன் (புதைகுழி அமைந்துள்ள இடம்) தொடர்புடைய சான்றுகள் தொடர்ந்து அகழ்வுகள் முன்னெடுக்கப்படுகையில் அழிக்கப்படுவதற்கான அபாயநேர்வு உள்ளது. சில சம்பவங்களில், குற்றச்செயலைப் புரிந்தவர்கள் அசலான புதைவிடம் தொடர்பாகச் சந்தேகம் கொண்டிருந்து அதனால் சடலங்களைத் தோண்டியெடுத்து அவற்றினை மிகவும் இரகசியமான இடத்தில் (இரண்டாம் புதைகுழி அமைந்துள்ள இடம்) மீளப் புதைத்திருக்கலாம். எனவே, கண்டுபிடிக்கப்பட்டது அசலான புதைகுழியா அல்லது இரண்டாவது புதைகுழியா என்பதைக் கண்டறிவதில் விசாரணையாளர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். எலும்புக்கூட்டுடன் சேர்ந்துள்ள மண் இந்த விடயத்தில் மிகவும் இன்றியமையாததாகும்.

காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம்

இலங்கையில் காணாமல் போதல்கள் பற்றிய பிரச்சினையினைத் தீர்ப்பதற்காக காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் (OMP) 2018 பெப்ரவரியில் நிறுவப்பட்டது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், கிளர்ச்சிகள் இடம்பெற்ற காலப்பகுதியில், மற்றும் அரசியல் வன்முறை இடம்பெற்ற காலப்பகுதியில் நடைபெற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கையின் பாரிய எண்ணிக்கையிலான காணாமல் ஆக்கப்படல் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு தேவைப்படுகின்றது என்பதற்கான முக்கியமான அங்கீகாரத்தினை இந்த அலுவலகத்தின் உருவாக்கம் குறிக்கின்றது. காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்ட ஒரு சுயாதீனமான அரச நிறுவனமாக உருவாக்கப்பட்டது (OMP சட்டம் 10 c)). காணாமல் போனவர்கள் எங்கேயுள்ளனர் என்பதைத் தேடிக் கண்டுபிடித்து என்ன சூழ்நிலையில் அவர்கள் காணாமல் போனார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் ஆணையும் இந்த அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது (OMP சட்டம் 2(a)10(1)(a)).

காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம், இரகசியப் புதைகுழி பற்றிய விசாரணையில் ஓர் அவதானிப்பாளராகச் செயற்பட்டு அகழ்வுகளை முன்னெடுப்பதற்கு நீதவானை வேண்டுவதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது (12(d)). 2023 ஜூலை மாதத்தின் போதுள்ளவாறாக, காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் 10 இற்கும் மேற்பட்ட இரகசியப் புதைகுழிச் சம்பவங்களை அவதானித்துக் கொண்டிருந்தது. ஆனால் இவற்றில் எவையுமே சாதகமான அடையாளப்படுத்தலை வழங்கவில்லை. அலுவலகம் கணிசமான அதிகாரங்களைக் கொண்டிருந்த போதிலும், தொழில்நுட்ப ஆற்றலின்மை, ஏனைய அரச அதிகாரிகளுடன் வரையறுக்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் தேடல் நடவடிக்கையில் போதிய கவனக்குவிப்பின்மை ஆகியவை, காணாமல் போனவர்களின் மற்றும் காணமல் ஆக்கப்பட்டோர்களின் குடும்பங்கள் தொடர்பான அதன் கடமைகளை அலுவலகம் நிறைவேற்றுவதற்குக் கடுமையான சவால்களாக இருப்பதுடன் குறிப்பாக இக்குடும்பங்களின் அன்புக்குரியவர்கள் இருக்குமிடத்தினை அலுவலகம் கண்டுபிடிப்பதிலும் கடுமையான சவால்களாக இருக்கின்றன.

இலங்கையில் இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணைகள்

இலங்கையில் அதிகமான இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணைகள் நீதிவானின் மேற்பார்வையின் கீழேயே நடைபெறுகின்றன. இவை ஒன்றில் மரண விசாரணையாக நடத்தப்படுகின்றன அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. மரணத்திற்கான காரணத்தினை நிலைநாட்டுவதும் தேவையேற்படின் குற்றவியல் விசாரணையினை நடத்துவதுமே இதன் பிரதான நோக்கமாகும். வழக்கு அழைக்கப்பட்டு நீதிமன்றத்தில் வாதாடப்படுகையில், விசாரணைகள் சமாந்தரமாக நடைபெறும். விசாரணையின் ஒரு பிரதான பாகம் இரகசியப் புதைகுழியில் நடைபெறும்.

இவ்வாறான சம்பவங்களில், சட்ட மருத்துவ அதிகாரியே (JMO) வழமையாகப் பிரதான விசாரணையாளர் வகிபாத்திரத்தினை வகிக்கின்றார். ஆனால் இவருக்குத் தொல்லியலாளர் உதவி வழங்கலாம் என்பதுடன் இவர் புதைகுழியினைத் தோண்டும் (அகழ்வு) செயன்முறையில் உதவுவார். நீதவான் இதில் ஒட்டுமொத்த மேற்பார்வை வகிபாத்திரத்தினை வகித்து விசாரணை அணியின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான பிரதான தீர்மானங்களை எடுப்பார். விசாரணைச் செயன்முறையில் பொலிசாரே பிரதான செயற்படுனராக உள்ளனர் என்பதுடன் குறிப்பிட்ட இடத்தினைப் பாதுகாப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றனர். குற்றச்செயல் நடந்த இடத்துக்கான அதிகாரிகள் (SOCO) எனும் ஒரு விசேட பொலிஸ் பிரிவினரே புதைகுழி அமைந்துள்ள இடத்திற்குப் பொதுவாக முதலில் வருகை தருகின்றனர் என்பதுடன் விசாரணைகளுக்கு உதவுவதற்காக விசாரணைகளை நடத்துகின்றனர். புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட சான்றுகள் நீதிமன்ற வளாகத்தில், பொலிஸ் நிலையத்தில் அல்லது சட்ட மருத்துவ அதிகாரி வசம் வைத்திருக்கப்படலாம். சில சான்றுகள் ஆய்வுகூடங்களுக்கு அல்லது அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களம் போன்ற அரசாங்கத் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படலாம். இலங்கையில் தற்போது அமுலில் உள்ள சட்ட – மருத்துவ முறைமை, எதிர்பாராத, இயற்கையல்லாத அல்லது சந்தேகத்துக்கிடமான மரணங்களைக் கையாளுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, ஆனால், இரகசியப் புதைகுழிகளைக் கையாளுவதில் இவை தனித்துவமான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. உதாரணமாக, சட்ட மருத்துவ அதிகாரிகள், ஓரளவுக்குக் கெடாதிருக்கும் மென் திசுக்கள் (தசைகள், உறுப்புக்கள்) தொடர்பாகக் கையாளும் தடயவியல் நோயியலில் பெரும் நிபுணத்துவம் கொண்டுள்ளனர். மாறாக, தடயவியல் மானுடவியல் என்பது எலும்புக்கூட்டு எச்சங்கள் (எலும்புகள்) தொடர்பான ஒரு நிபுணத்துவத் துறையாகும். அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது போல், இலங்கையில் போதிய அளவிலான விசேடத்துவம் பெற்ற தடயவியல் நிபுணர்கள் இல்லாதிருப்பதுடன் இரகசியப் புதைகுழி தொடர்பான விசாரணைகளைச் செயற்திறன்மிக்க முறையில் மேற்கொள்வதற்கான ஒரு பரிபூரணமான அணுகுமுறையும் இலங்கையில் இல்லாதிருக்கின்றது.

“இலங்கையில் தடயவியல் நிபுணர்கள் அண்மையில் இறந்தவர்கள் தொடர்பாகச் சட்ட மருத்துவ விசாரணைகளைக் கிரமமாக மேற்கொண்டு வருகின்றனர். எவ்வாறாயினும், அதிகமான நாடுகளில் உள்ளதைப் போன்று, எலும்புகளை மீட்டு அவற்றினைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவைப்படும், குறிப்பான பாரிய மனிதப் புதைகுழிகளில் உள்ள எலும்புகளைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவைப்படும் தனித்துவமான திறன்களில் இவர்கள் பூரண ஆற்றல் அற்றவர்களாக உள்ளனர்”

(ICRC தேவைகள் மதிப்பீடு 2015 பக்.31).

எனவே, உள்நாட்டு ஆற்றல் மற்றும் செயன்முறைகள் விருத்தி செய்யப்படும் வரையில், சர்வதேசத் தடயவியல் நிபுணத்துவம் இன்றியமையாத பாத்திரத்தினை வகிக்க முடியும். 1999 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்ட செம்மணி பாரிய மனிதப் புதைகுழி அகழ்வுகளில் இதற்கான முன்னிகழ்வு காணப்படுகின்றது. இதன் போது "தொழில்நுட்ப உதவியினை" வழங்குவதற்காக 4 சர்வதேசத் தடயவியல் நிபுணர்கள் முறையாக ஈடுபட்டிருந்தனர்.

தொழில்நுட்ப மட்டுப்பாடுகளுக்கு அப்பால், சுயாதீனமான விசாரணைச் செயன்முறைகளைக் கீழறுக்கும் கணிசமான அரசியல் அழுத்தத்தின் காரணத்தினால் இலங்கைச் சூழமைவு சவால்மிக்கதாகக் காணப்படுகின்றது. விசாரிக்கப்பட்ட இரகசியப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளில் பெரும்பாலானவை இன்னும் பூர்த்தி செய்யப்படாதிருக்கின்றன. இந்த வழக்குகளில் பல இன்னும் தீர்க்கப்படாதிருப்பதுடன் நீதிமன்றம் அதன் முடிவுகளை இவை தொடர்பில் வழங்கவில்லை. மேலும், இவற்றில் சில வழக்குகள், மாத்தளை (2013), மற்றும் களுவாஞ்சிக்குடி (2014), தொடர்புடைய நீதிமன்றம் வழக்குகளை விளங்குவதைத் தொடராத காரணத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலைகளில், வழக்குகள் உரிய முறையில் விசாரணை செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தலையிடுவதன் மூலமும் விசாரணைகள் தொடர்பான தகவல்களுக்குப் பகிரங்கமான அணுகல் உண்டு என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் குடும்பங்களும் சிவில் சமூகக் குழுக்களும் முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்க முடியும்.

இரகசியப் புதைகுழி விசாரணைகள் உலகளாவிய ரீதியில் எவ்வாறு முன்னேறியுள்ளன?



பாரிய அளவில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்படல் எனும் அச்சந்தரும் பிரச்சினை ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்கா முதல் ஆபிரிக்கா மற்றும் ஆசியா வரையிலான பல நாடுகள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாக உள்ளது. இப்பாரிய அளவிலான காணாமல் போதல்கள் உள்நாட்டு யுத்தச் சூழமைவில் அல்லது ஏகாதிபத்திய ஆட்சிகளில் மிகப் பொதுவாக இடம்பெற்றுள்ளன. பல நாடுகளில், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சிலருக்கு என்ன நடந்தது என்ற உண்மையினைக் கண்டுபிடிப்பதற்காக இரகசியப் புதைகுழிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. உடல் எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை காணாமலாக்கப்பட்டோருடன் பொருத்திப் பார்க்கப்பட்டு உடல் எச்சங்கள் குடும்பங்களிடம் கையளிக்கப்படுவதற்கு இந்த விசாரணைகள் சில வேளைகளில் காரணமாக அமைந்துள்ளன.

புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்ட சான்றுகளைப் பயன்படுத்திக் குற்றச்செயல்களை நிகழ்த்தியவர்களுக்கு எதிராகச் சில வழக்காடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. பொஸ்னியா – ஹேர்சிகோவினாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது (1992 -1995) 34,000 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 80% தினரது எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் கடந்த நாற்பது வருடங்களாகக் காணப்படும் இரகசியப் புதைகுழிகள் என்ற போக்கிற்கான பதிற்செயற்பாட்டில், விசாரணைகளுக்காக விசேடத்துவமிக்க திறன்களின் தொகுதிகள், செயன்முறைகள் மற்றும் நிறுவனங்கள் உருவாகியதை நாம் கண்டுள்ளோம். காணாமளாக்கப்படலின் போக்கிற்கு முகங்கொடுத்த ஒரு பிராந்தியம் என்ற ரீதியில் இலத்தீன் அமெரிக்கா, இவ்வாறான புதைகுழிகளை விசாரிக்கக்கூடிய விசேடத்துவம் பெற்ற எண்ணற்ற சிவில் சமூக அமைப்புக்களைக் கொண்ட முன்னோடி பகுதிகளில் ஒன்றாக உருவாகியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தேடலை மேற்கொள்ளும் தடயவியல் பணியாளர்களைக் கொண்ட சிவில் சமூகமாக அது இருக்கின்ற அதேவேளை, ஏனைய நாடுகளில் இப்பணியினை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட (இலங்கையில் OMP போன்ற) அரச நிறுவனங்களாக அவை இருக்கின்றன.

இந்த நிறுவனங்களின் உருவாக்கத்திற்குச் சமாந்தரமாக, விசேடத்துவத் துறைகள் உருவாகியுள்ளன, குறிப்பாகத் தடயவியல். ஒவ்வொரு நிறுவனமும் வித்தியாசமான திறன்களையும் உத்திகளையும் செயற்பாட்டு முறைகளையும் கொண்டுள்ள அதேவேளை, இவற்றின் அணுகுமுறையில் முக்கியமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன:

குடும்பங்களின் ஈடுபாடு:
செயற்திறன்மிக்க மற்றும் நம்பத்தகுந்த விசாரணைக்கு, காணாமல் போனவர்களதும் காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பங்களைப் பல்வேறு வழிகளில் ஈடுபடுத்துவது தேவைப்படுகின்றது. அவதானிக்கப்பட்டவாறாக, இரகசியப் புதைகுழி விசாரணை தொடர்பான செயற்பாடுகளையும் அவதானிப்பதற்கான உரிமையினை இக்குடும்பங்கள் கொண்டுள்ளன. அரச அதிகார அமைப்புக்களில் பொதுமக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளதால் இக்குடும்பங்களின் பங்கேற்பு விசாரணைச் செயன்முறைக்கு நம்பகத்தன்மையினை வழங்குகின்றது. விசாரணை நடத்தும் அதிகார அமைப்புக்கள் குடும்பங்களை உள்ளடக்கத் தவறுகையில் அல்லது அவர்களுக்கு நேரடியாகத் தகவல்களை வழங்கத் தவறுகையில், பரிசோதனைகளின் முடிவிலும் விசாரணை நடத்தும் அதிகார அமைப்புக்களிலும் அதிகரித்த அளவில் பொதுமக்கள் அவநம்பிக்கை கொள்வதே விளைவாக ஏற்பட்டிருக்கின்றது.

காணாமல்போன நபரின் தனித்துவமான உடல் அம்சங்கள் உள்ளடங்கலாகச் செயற்திறன்மிக்க விசாரணைக்கு இன்றியமையாததான

தகவல்களுக்குக் குடும்பங்கள் அத்தியாவசியமான மூலங்களாக உள்ளன. புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட சடலத்தின் மரபணுக்களுடன் பொருந்துகின்றதா எனப் பரிசோதிப்பதற்காக குடும்ப உறுப்பினர்கள் டிஎன்ஏ மாதிரியினை வழங்குமாறும் தேவைப்படுத்தப்படுகின்றனர். தேடுதலில் பணியாற்றும் நிறுவனங்களைப் பொறுத்த அளவில், குடும்பங்கள் வெறுமனே தகவல்களுக்கான மூலங்களாக மாத்திரம் பார்க்கப்படாமல் ஒரு சவால்மிக்க செயன்முறையின் அவசியமான பங்காளர்களாகவும் நோக்கப்படுகின்றனர். விசாரணைகளில் குடும்பங்களைச் சம்பந்தப்படுத்தும் வித்தியாசமான அணுகுமுறைகள் பற்றி நாம் இந்த நூலின் பிற்பகுதியில் கலந்துரையாடுவோம்.

தடயவியல் திறன்களைப் பயன்படுத்தல்:
இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணைக்கு விசேடத்துவம் பெற்ற தடயவியல் திறன்கள் தேவைப்படுகின்றன. இரகசியப் புதைகுழி அகழ்வுகளில் தகவமைக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படத் தேவையான இன்றியமையாத உத்திகளையும் திறன்களையும் தொல்லியல் வழங்குகின்றது. எவ்வாறாயினும், இரகசியப் புதைகுழி அமைந்துள்ள இடங்களில் **தடயவியல் தொல்லியலாளர்** ஒருவரால் அகழ்வு மேற்கொள்ளப்படுவதே சிறந்ததாகும்.

புதைகுழி அமைந்துள்ள இடத்தில் இருந்து இவரால் பொருட்களைச் சான்றுகளுக்கு ஆகக் குறைவான சேதங்களுடன் பாதுகாப்பாகவும் கவனமாகவும் மீட்க முடிவதோடு மாத்திரமன்றி சடலங்களும் அதனுடன் இணைந்த சான்றுகளும் அவ்விடத்தில் எவ்வாறு இடப்பட்டிருக்கலாம் என்பதையும் விளக்கக் கூடியதாக இருக்கும். மனித உடல் எச்சங்களை (குறிப்பாகச் சடலங்கள் எலும்புக்கூடுகளாக இருக்கையில்) மீண்டும் தோண்டி எடுத்துப் பகுப்பாய்வு செய்யும் பணிக்கு, எலும்புக்கூட்டினைப் பரிசோதித்துப் பகுப்பாய்வினை வழங்கும் **தடயவியல் மானுடவியலாளரின்** உதவி தேவைப்படுத்தப்படுகின்றது. **தடயவியல் பல்லாய்வியல்** போன்ற ஏனைய தடயவியல் அறிவியல்களும் சடலத்தின் அடையாளத்தினைத் தீர்மானிப்பதற்காகப் பல்லினைப் பரிசோதித்து, குடும்ப உறுப்பினர்களுடனான நேர்காணல்களில் இருந்தும் மருத்துவ அறிக்கைகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் அவற்றினை ஒப்பிட்டுப் பார்ப்பதில் ஒரு வகிபாத்திரத்தினை வகிக்கும். **தடயவியல் மரபணுவியலாளர்** குடும்ப உறுப்பினர்கள் என ஊகிக்கப்படுபவர்களின் டிஎன்ஏக்களை உடல் எச்சங்களின் டிஎன்ஏயுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார். மரபணுவியலில் தொடரும் முன்னேற்றங்கள், அடையாளம் காணலில் ஓர் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகிக்கலாம். இவ்வாறு நோக்குகையில், அரச செயற்படுனர்கள் என்ற ரீதியிலும் அரச சார்பற்ற செயற்படுனர்கள் என்ற ரீதியிலும், இவ்வாறான தடயவியல் திறன்களில் இலங்கை பின்தங்கியே காணப்படுகின்றது.

பல்வகைமை மிக்க அணி:
விசாரணை அணியில் பல்வகைமை மிக்க தொழில்முறையானவர்கள் இடம்பெற வேண்டும். குற்றவியல் விசாரணையில் அனுபவமுடைய விசாரணையாளர்களுக்கு அப்பால், காணாமல் ஆக்கப்படல் பாங்குகள் பற்றியும் வன்முறையின் ஒட்டுமொத்தச் சூழமைவு பற்றியும் அறிவுடைய ஆய்வுத் திறன்கள் கொண்ட நபர்களையும் அணி தேவைப்படுத்துகின்றது. மேலும், புதைகுழி அமைந்துள்ள இடமானது, மண், தோட்டாக்கள் மற்றும் விலங்குகளின் உடல் எச்சங்கள் போன்ற முக்கியமான சான்றுகளைக் கொண்டுள்ளன. இவை யாவுமே கட்டாயம் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். சில குறிப்பிட்ட சான்றுகளைப் புரிந்துகொள்வதற்கு விசாரணை அணி புற நிபுணர்களைக் கலந்தாலோசிக்கலாம். நிர்வாக உதவிப் பணியாளர்கள், புதைகுழி அமைந்துள்ள இடத்தில் உள்ள வேலைகளுக்கு உதவுவதற்கான தொழிலாளர்கள், தேவையேற்படுகையில் காணாமல் போனவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆற்றுப்படுத்தலை வழங்குவதற்கான உளசமூக மன நல நிபுணர்கள் உள்ளிட்ட ஏனைய வளங்களையும் அணி கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.

பல்துறை சார்ந்ததும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான அணுகுமுறை:
சிக்கலான சம்பவங்களைச் செயற்திறனுடன் விசாரிப்பதற்காக பல்வேறு வித்தியாசமான முறையியல்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த முறைகள் மரபுரீதியான குற்றவியல் விசாரணை நடவடிக்கைமுறைகளையும் (உதாரணமாக சாத்தியமான சாட்சிகளை நேர்காணல் மற்றும் சான்றுகளைச் சேகரித்தல்) தடயவியல் அறிவியலையும் உள்ளடக்குகின்றன. காணாமல் போனவரின் மருத்துவப் பதிவுகளைக் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூட்டுடன் ஒப்பிடுவது அடையாளப்படுத்தலுக்கு உதவலாம், உதாரணமாக, குறிப்பிட்ட நபரொருவருக்கு "இடையெலும்பு மாற்று" மேற்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது "இதயத் துடிப்புச் சீராக்கி" பொருத்தப்பட்டிருந்தால் அல்லது வேறு "மருத்துவக் கருவிகள்" பொருத்தப்பட்டிருந்தால்.

பல்துறை சார்ந்த அணுகுமுறையில் இந்த வித்தியாசமான முறைகள் மிகத் துல்லியமான பெறுபேறுகளைப் பெறுவதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றன. எனவே, காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுடன் விசாரணையாளர் ஒருவரினால் கட்டியெழுப்பப்படும் வலுவான உறவு, காணாமல் போன நபரின் உயிரியல் வரலாறு பற்றிய முக்கியமான தகவல்களை வழங்கலாம். உதாரணமாக, காணாமல் போன தனது சகோதரர் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகித் தன் முழங்கால் சில்லில் காயமடைந்திருந்தார் என்றும் அது அவர்களின் பெற்றோர்களுக்குத் தெரியாது என்றும் உடன்பிறப்பு ஒருவர் வெளிக்கூறலாம்.

இந்தப் பல்துறை சார்ந்த அணுகுமுறையானது, குற்றவியல் விசாரணை மற்றும் தொல்லியல் தொடக்கம் பல்லாய்வியல் மற்றும் மரபணுவியல் வரையான பல்வேறு வீச்சிலான துறைகளின் பலத்தினை இணைப்பதற்கு நாடுகின்றது. சம்பவம் பற்றிய இறுதி அறிக்கையானது வெவ்வேறு நிபுணர்களின் கண்டுபிடிப்புக்களையும் ஒன்று சேர்த்து சான்றுகளின் வெவ்வேறு பகுதிகளையும் இணக்குவிப்பதே இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையின் பாகமாக உள்ளது. இது ஓர் உத்தியினைப் பின்பற்றி நீதிபதிக்கு வேறான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் தனிப்பட்ட நிபுணர்களுக்கு மாற்றமானதாகும். விசேடத்துவ அறிவின்றி, அதனால் தமது சொந்த முடிவிற்கு வருவதற்கு இந்த நீதிபதிகள் இதனால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இரகசியப் புதைகுழி விசாரணைக்கான இந்த அணுகுமுறையானது தொடர்ந்து விருத்தியடைந்து வருகின்றது, குறிப்பாக, தொழில்நுட்பம் மற்றும் முறையியலில் ஏற்படும் முன்னேற்றங்களுடன் விருத்தியடைந்து வருகின்றது.

இரகசியப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான சர்வதேச நியமங்களை உருவாக்குவது தொடர்பான முயற்சிகள்:

காணாமல் ஆக்கப்படலின் வித்தியாசமான அம்சங்கள் தொடர்பான தனித்துவமான உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை அடையாளம் காண்பதற்கான சர்வதேச மனிதநேய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் கடந்த சில தசாப்தங்களில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும், இரகசியப் புதைகுழிகளின் பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான கோட்பாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியின் உருவாக்கம் பின்தங்கியுள்ளது. அண்மைக் காலங்களில், சர்வதேச நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கான சில முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. இவை கட்டுப்படுத்துபவையாக இல்லாவிடினும், வழிகாட்டல்களையும் சிறந்த நடைமுறைகளையும் வழங்குகின்றன. குறிப்பாக, பாரிய மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பு மற்றும் விசாரணை (2020) பற்றிய போர்ன்மௌத் மரபொழுங்கு (Bournemouth Protocol on Mass Grave Protection and Investigation (2020)) மற்றும் அதனுடன் சேர்த்து சட்டவிரோதமானதாக இருக்கக்கூடிய மரண விசாரணை பற்றிய Minnesota Protocol (2016) ஆகியன, நடைமுறைகளையும் நியமங்களையும் மேம்படுத்துவதற்கான உசாவல் விடயங்களை வழங்கலாம்.

இரகசியப் புதைகுழி விசாரணையின் கட்டங்கள் என்ன? விளக்கக் குறிப்பு – கட்டங்களுடனான வரைபியல்



விசாரணைகள் புதைகுழி அமைந்துள்ள இடத்தில் நடைபெறும் வேலைகளுக்கும் அதில் இருந்து சேகரிக்கப்பட்ட சான்றுகளுக்கும் வரையறுக்கப்பட்டவையல்ல என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். ஆனால் இது மிகப் பாரிய விசாரணைச் செயன்முறையின் ஓரங்கமாகும். புதைகுழி அமைந்துள்ள இடத்தில் நடைபெறும் வேலைக்குச் சமாந்தரமாக, பொலிஸ் போன்ற விசாரணை அதிகார அமைப்புக்கள் புதைகுழி அமைந்துள்ள இடம் தொடர்பாகவும் சாத்தியமான பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்தும். இந்த விசாரணைகள் மனிதப் புதைகுழி அமைந்துள்ள இடத்தில் மேற்கொள்ளப்படும் விசாரணையின் வெவ்வேறு கட்டங்களின் காலப்பகுதியில் தொடர்ந்து இடம்பெறலாம்.

1. **கண்டுபிடிப்பு:**
இரகசியப் புதைகுழி அடையாளம் காணப்படுவதைக் குறிக்கின்றது.

2. **அறிக்கையிடல்:**
இரகசியப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிப்பதைக் குறிக்கின்றது.

3. **அகழ்வு:**
மனித எச்சங்களும் ஏனைய முக்கியமான சான்றுகளும் இருக்கும் இடம் வரையில் புதைகுழி அமைந்துள்ள இடத்தினைத் தோண்டும் செயன்முறையினைக் குறிக்கின்றது.

4. **புதைத்த சடலத்தினைத் தோண்டியெடுத்தல்:**
எந்தெந்த எலும்புகள் எத்தனிநபர்களுக்குச் சொந்தமானது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இச்செயன்முறையின் போது உடல் எச்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தோண்டியெடுத்தல் என்பது புதைகுழியில் இருந்து உடல எச்சங்களை மீட்பதையும் அதனுடன் இணைந்த பொருட்களை மீட்பதையும் குறிக்கின்றது.

5. **பகுப்பாய்வு:**
குற்றச்செயலுடன் தொடர்புடைய முக்கிய உண்மைகளை நிலைநாட்டுவதற்காக வெவ்வேறு சான்றுகளைப் பல விசாரணையாளர்கள் பரிசோதிப்பதை இது குறிக்கின்றது.

6. **அடையாளப்படுத்தல்:**
மனித எச்சங்களைத் காணாமல் போயுள்ள நபருடன் பொருத்திப் பார்த்தலை இது குறிக்கின்றது.

7. **உடல் எச்சங்களைக் கையளித்தல்:**
புதைகுழி அமைந்துள்ள இடத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களும் தனிப்பட்ட பொருட்களும் இறுதிச் சடங்கினை நடத்துவதற்காக அவர்களின் குடும்பங்களிடம் கையளிக்கப்படுவதை இது குறிக்கின்றது.

இரகசியப் புதைகுழி விசாரணையின் ஒவ்வொரு கட்டத்தினையும் புரிந்துகொள்ளல்

இந்தப் பகுதியானது விசாரணையின் பல்வேறு கட்டங்களை விபரிக்கின்றது. இலங்கையில், அதிகமான விசாரணைகள் அடையாளப்படுத்தலின் கடைசிக் கட்டம் வரைக்கும் சென்று எச்சங்களைக் கையளிப்பது வரை முன்னேற்றமடையவில்லை. எனவே, இலங்கையில் இருந்தான சாதகமான உதாரணங்கள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும், கீழே கலந்துரையாடப்பட்டுள்ள கட்டங்கள் இங்கே அனுபவிக்கப்பட்ட யதார்த்தத்தினை விட மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படும் சம்பவ நிலைகளையே விவரிக்கின்றது

1. கண்டுபிடிப்பு

கடந்த மூன்று வருடங்களில் இரண்டு இரகசியப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமையினை ஊடகம் வருடாந்தம் கோடிட்டுக்காட்டியுள்ளது. இக்கண்டுபிடிப்புக்கள், பின்வரும் சந்தர்ப்பங்கள் போன்ற வித்தியாசமான சூழ்நிலைகளில் இடம்பெற்றுள்ளன:

- பல வருடங்களாகத் துப்பரவு செய்யப்படாதிருந்த காணித் துண்டில் ஒரு விவசாயி பயிர் செய் ஆரம்பித்தமை.
- ஒரு கட்டடத்திற்கு அத்திவாரமிடுவதற்காக நிர்மாணத் தொழிலாளர்கள் நிலத்தைத் தோண்டியமை
- வெடிக்காத யுத்த வெடிபொருள் எச்சங்கள் கொண்ட பிரதேசத்தினைத் துப்பரவு செய்வதற்காகக் கண்ணிவெடியகற்றப்பட்டமை.

எலும்புகளைத் தற்செயலாகக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவதானமாக இருப்பது முக்கியமானதாகும் என்பதுடன் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டமைக்குப் பல மாற்று விளக்கங்கள் இருக்கின்ற காரணத்தினால் இது ஓர் இரகசியப் புதைகுழி என ஊகிக்கக் கூடாது:

- சில விலங்குகளின் எலும்புகளை மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை மனித எலும்புகள் போன்று தோற்றமளிக்கலாம், இதனால்தான் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் விசேடத்துவ விசாரணையாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.
- கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் உண்மையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேமக்காலைகளாக இருக்கலாம் - அதாவது, அவை நவீன யுகத்திற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் எலும்புக்கூடுகள்.
- இரகசியப் புதைகுழிகள் அவசியம் மோதலுடன் தொடர்புடையதாக இருக்கவேண்டியதில்லை அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டியதில்லை, ஆனால் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.
- 2004 டிசம்பர் 26 சுனாமியின் பின்னர், 35000 இற்கும் மேற்பட்ட மக்கள் இலங்கையில் கொல்லப்பட்டனர் அல்லது தொலைந்து போயுள்ளனர். கண்டுபிடிக்கப்பட்ட உடல்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாரிய மனிதப் புதைகுழிகளில் ஒன்றாகப் புதைக்கப்பட்டன. அதிகார அமைப்புக்களையும் உள்ளூர்ச் சமுதாயங்களையும் திக்குமுக்காட வைத்த அழிவின் பிரம்மாண்டத்தின் காரணமாக இவ்வாறு புதைக்கப்பட்ட இடங்களில் அனைத்தும் தெளிவாக அடையாளமிடப்படவில்லை.

ஏற்படக்கூடிய உணர்வுகள்

இரகசியப் புதைகுழி ஒன்றினைக் கண்டுபிடித்தமை பற்றிய அறிவித்தல் காணாமல் போயுள்ளவர்களின் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களில் தொடரான உணர்வுகளை உருவாக்கலாம். இவை பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம்:

- தமது அன்புக்குரியவர்களின் எச்சங்கள் அவ் இரகசிய புதைகுழியில் இருக்கலாம் என்ற அச்சம்
- இந்தச் செய்தி தமது அன்புக்குரியவர்களுடன் எவ்விதத்திலாவது சம்பந்தப்பட்டிருக்குமோ என்ற குழப்பம்.
- தமது அன்புக்குரியவர்கள் இறந்திருக்கலாம் எனக் கருதுவதால் ஏற்படும் குற்றவுணர்வு அல்லது கோபம் (தம்மீதோ அல்லது ஏனையோர் மீதோ ஏற்படுவது).
- இரகசிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டமை எவ்விதத்திலாவது தங்களின் மோசமான அச்சத்தினை உறுதிப்படுத்தலாம் என்ற பதகளிப்பு.
- தமது அன்புக்குரியவர் இன்னும் காணாமல் போனவராகவே இருக்கின்றார் என்ற புதுப்பிக்கப்பட்ட மன வலி.
- தமது அன்புக்குரியவருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய செய்தி தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்ற அயர்ச்சி உணர்வு.
- தூதரகங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட மூன்றாம் தரப்பினர் இரகசிய புதைகுழியில் என்ன நடக்கின்றது என்பது பற்றித் தம்மிடம் கேட்பது பற்றிய எரிச்சல்.
- எதையும் உணராதிருத்தல்.

காணாமல் போன நபர்களுடன் பணியாற்றுவோரைப் பொறுத்த அளவில், கண்டுபிடிக்கப்பட்டமை பற்றிய செய்தியினைப் பகிர்வதை அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் இருந்தான அவ்வாறான செய்திக்கு பதிற்செயற்பாடாற்றுவதை நிதானமான தொனியில் மேற்கொள்வது முக்கியமானதாகும் என்பதுடன் அவர்கள் எதிர்பார்ப்பினை எழுப்பக் கூடாது அல்லது கண்டுபிடிப்பினை, தெளிவான ஆதாரமின்றி, குறிப்பிட்ட குடும்பத்தின் தொலைந்து போன அன்புக்குரியவருடன் நேரடியாக இணைக்கக் கூடாது. சாத்தியமாக இருக்கையில், பராமரிப்புப் பணியாளர்களும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினருக்கு உதவும் மக்களும் இரகசிய புதைகுழி தொடர்பாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும் முன்னேற்றங்கள் பற்றிக் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்வதற்காகக் கட்டாயம் பின்தொடரலை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதுடன் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைக் கட்டாயம் பெற வேண்டும்.

2. அறிக்கையிடல்

விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்காக, சந்தேகத்துக்குரிய மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை கட்டாயமாக அறிக்கையிடப்பட வேண்டும்:

பொருத்தமான அதிகார அமைப்புக்களிடம் அறிக்கையிடல்: சாத்தியமானவிடத்து, பொலிசாருக்கு இயலுமான அளவு விரைவாக அறிவிக்கப்பட வேண்டும், ஆனால், அவர்கள் சமூகமளிக்காவிடின், சிறிய கிராமமொன்றாக இருப்பின், கிராம சேவை அதிகாரி அல்லது சமாதான நீதவான் போன்ற வேறொரு உள்ளூர் அதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும். இந்த அதிகாரிகளுக்கு இது அறிக்கையிடப்படாமல் மாறாக, உள்ளூர் இராணுவ ஆளணியினர் அல்லது வேறு அரசாங்க அதிகாரி போன்ற ஏனையோருக்கு அறிக்கையிடப்படுகையில், விசாரணை முன்னெடுக்கப்படாமல் போகலாம்.

அறிக்கையிடத் தவறுகின்றமை: சில சம்பவங்களில், சந்தேகத்துக்குரிய மனித எச்சங்களைக் கண்டுபிடிக்கும் தனிநபர்கள் அதனைப் பொருத்தமான அதிகாரிகளிடம் அறிக்கையிடக் கூடாது எனத் தீர்மானிக்கலாம். கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் அல்லது அந்த இடத்திற்கு அருகில் தனது வேலையைத் தொடர்ந்து மேற்கொள்வது தடுக்கப்படலாம் என ஏற்படும் அச்சத்தினால் இது நிகழலாம். இவ்வாறு நடந்தால், புதைகுழி சார்ந்த விசாரணை எதுவும் முன்னெடுக்கப்படாது. எவ்வாறாயினும், இரகசியப் புதைகுழி

என்பது குற்றச்செயல் நடைபெற்றமைக்கான சாத்தியத்தினைக் கொண்டிருக்கும் ஓரிடமாகும் என்பதால் அது பற்றி அறிக்கையிடாமையானது நீதியைத் தடைசெய்வதாகவும் சட்டத்தினை மீறியமையாகவும் அமையும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளை இடைநிறுத்தல்: குறிப்பிட்ட இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சகல வேலைகளும் அல்லது ஏனைய செயற்பாடுகளும் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும். உதாரணமாக, நிலத்தினைத் தோண்டுவதற்காக நிர்மாணப் பணியாளர்களினால் பேக்ஹோ இயந்திரம் பயன்படுத்தப்படுகையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் மேலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட இடத்திலுள்ள மண் வேறோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால், இந்த வேலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு நிறுத்துவதால் மிக முக்கியமான சான்றுகளுக்கு ஏற்படக்கூடிய மேலதிக சேதம் அல்லது இழப்பு தவிர்க்கப்படலாம். இவ்வாறு கண்டுபிடிப்பவர்கள் எச்சங்களைத் தேடி அவர்களாகவே குறிப்பிட்ட இடத்தினைத் தோண்டுவதற்கு முயற்சிக்கக் கூடாது. ஏனெனில், இதனால் மிக முக்கியமான சான்றுகளின் இழப்பு அல்லது அழிவும் ஏற்படலாம்.

கண்டுபிடிக்கப்பட்ட இடத்தினைப் பாதுகாத்தல்: இரகசியப் புதைகுழி பற்றி அறிக்கையிட்டதைத் தொடர்ந்து, குற்றச்செயல் நடைபெற்ற ஓரிடமாகப் பொலிசார் அந்த இடத்தினைச் சுற்றி வளைத்துக் காவலிட்டு இடத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் அவ்விடத்தில் கிடைக்கக் கூடிய சான்றுகளில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அவ்விடத்தில் பிரசன்னமாவது உறுதிப்படுத்தப்படலாம்.



மன்னார் சதொச சம்பவம்

2018 மார்ச் மாதம், நிர்மாணப் பணிக்காக வாங்கிய மண்ணில் எலும்பு எச்சங்கள் இருப்பதை ஒரு பெண் கண்டுபிடித்தார். இதனை அதிகார அமைப்புக்களுக்கு அவர் அறிவித்ததும் பொலிசார் இதில் சம்பந்தப்பட்டனர். பொலிசாரின் விசாரணையின் காரணமாக மன்னார் நகர மத்தியில் அமைந்திருந்த சதொச நிர்மாணத் தளம் கண்டறியப்பட்டது. அவ்விடத்தினைக் குற்றச்செயல் நடைபெற்ற ஓரிடமாகப் பிரகடனப்படுத்தி, விசாரணை அணியொன்று அகழ்வினை ஆரம்பித்ததும் விரைவில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

காலப் போக்கில், அவ்விடத்தில் 300 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்பெண் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்த காரணத்தினாலேயே இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பெண்ணைப் போன்று, இவ்வாறான கண்டுபிடிப்புக்களைத் தமது சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபைகளுக்கு மற்றும்/ அல்லது பொலிசுக்கு அறிவித்த காரணத்தினால் உரிய பின்தொடரல் இடம்பெறுவதை உறுதிப்படுத்திய இவ்வாறான சில தனிநபர்கள் உள்ளனர். அறிக்கையிடல் என்பது அதீத முக்கியத்துவம் வாய்ந்ததாகும், இல்லையெனின், எச்சங்கள் தொடர்ந்தும் மறைக்கப்பட்டு, குற்றச்செயலாக இருப்பதற்கான சாத்தியமுடைய அந்த விடயம் தொடர்பான விசாரணை நடத்தப்படாமல், குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும்.

3. அகழ்வு

நோக்கம்: அகழ்வுச் செயன்முறை, எச்சங்களையும் ஏனைய சான்றுகளையும் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த இடத்திற்கு மனித எச்சங்கள் எவ்வாறு வந்து சேர்ந்தன என்பதை விளக்குவதற்கான சான்றுகளைச் சேகரிப்பதற்கு அகழ்வு உதவும் என்பதுடன் பின்வருவன போன்ற முக்கியமான வினாக்களுக்கும் விடையளிக்கும்:
அ) இவ் இரகசிய புதைகுழியின் வயதென்ன?
ஆ) கவனத்துடனும் மரியாதையுடனும் உடல்கள் புதைக்கப்பட்டனவா அல்லது அடக்கம் ஏனோதானோவென அவசரத்தில் மேற்கொள்ளப்பட்டதா? அகழ்வுச் செயன்முறையும் சடலங்களைத் தோண்டியெடுத்தலும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புற்றுள்ளன என்றாலும் தெளிவினை நோக்கமாகக் கொண்டு, இவை வேறாக விளக்கப்படுகின்றன.

கவனித்துப் பேணுவதற்கான தேவை: புதைகுழி அமைந்துள்ள இடம் பல காரணங்களுக்காகக் கவனமாக அகழப்பட வேண்டும். முதலாவதாக, மனித எச்சங்களுக்கு எவ்விதமான சேதங்களும் ஏற்படுவதைத் தடுத்தல். இரண்டாவது, மனித எச்சங்களைத் தோண்டியெடுப்பது மாத்திரமே கவனத்திற்குரியது அல்ல, அவற்றுடன் இணைந்த ஏனைய சகல சான்றுகளும் அடையாளம் காணப்படுவதும் கவனத்திற்குரியதாகும். மூன்றாவதாக, புதைகுழியின் மண் சுவர் மற்றும் எச்சங்களுக்கு மேல் இருக்கும் மண் உள்ளிட்ட புதைகுழி அமைந்துள்ள இடம்/புதைகுழியின் வரலாற்றினைப் புரிந்துகொள்வதற்கான அதிமுக்கிய சான்றினைக் கொண்டுள்ளது. அகழ்வுகள் புதைகுழி அமைந்துள்ள இடத்தினைத் தடாலடியாக மாற்றி அவ்விடத்திற்குச் சேதத்தினை ஏற்படுத்துகின்றன, மேலும் புதைகுழியின் அசலான சூழமைவினை மீள உருவாக்க முடியாது.

முறை: அகழ்வுகள் முறைமை வாய்ந்த வகையிலும் அறிவியில் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். புதைகுழி அமைந்துள்ள இடம் மற்றும் அகழ்வின் ஒவ்வொரு கட்டம் ஆகியன கவனமாக ஆவணப்படுத்தப்பட்டுப் பதிவுசெய்யப்பட வேண்டும். தொல்லியலாளர்களினால் பயன்படுத்தப்படும் முறைகளும், புதைகுழி அமைந்துள்ள இடத்தின் படம், வரைபடங்கள், அளவீடுகள் மற்றும் புகைப்படங்கள் போன்ற கருவிகளும் இச்செயன்முறைக்கெனத் தகவமைக்கப்பட்டுள்ளன. தடயவியல் தொல்லியலாளரும் தடயவியல் மானுடவியலாளரும் புதைகுழி அமைந்துள்ள இடத்தில் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதே மிகச் சிறப்பான ஒரு நிலைமையாக அமையும்.

ஆவணப்படுத்தலுக்கான தேவை: அகழ்வுச் செயன்முறையின் போது புதைகுழி அமைந்துள்ள இடத்தில் இருந்து கிடைக்கும் சகல சான்றுகளையும் பாதுகாப்பதற்காக, புகைப்படம், வீடியோ உள்ளிட்ட பூரண ஆவணப்படுத்தல் அவசியமானதாகும் என்பதுடன் கண்டெடுக்கப்படும் சகல பொருட்களும்/ எச்சங்களும் அவை கண்டெடுக்கப்படுகையிலேயே பதிவுசெய்யப்படுதலும் அவசியமானதாகும்.

தகவல்கள் இழக்கப்படும் சாத்தியம்: முறையான பயிற்சி மற்றும் அனுபவம் இன்றி மேற்கொள்ளப்படும் அகழ்வுகளால் முக்கியமான தகவல்கள் இழக்கப்படலாம். இதனால் துல்லியமற்ற வியாக்கியானங்கள் வழங்கப்படலாம். உதாரணமாக, கண்டெடுக்கப்படும் பொருட்களுக்கும் மனித எச்சங்களுக்கும் இடையிலான தொடர்பினை நிலைநாட்டுவது முக்கியமானதாகும். வருடம் தெளிவாகத் தெரியும் கலண்டரின் ஒரு பக்கம் மேற்பரப்புக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்டு, மனித எச்சங்கள் கிட்டத்தட்ட 6 அடி ஆழத்தில் காணப்பட்டால், இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு தொடர்பு உள்ளது என ஒருவரால் உடனடியாக ஊகிக்க முடியாது. அவை வேறு வேறு ஆழங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்டன என்ற உண்மை பதிவுசெய்யப்படாவிடின், அடக்கம் செய்யப்பட்ட திகதியினைக் கலண்டர் சுட்டிக்காட்டுகின்றது என விசாரணையாளர்கள் ஊகிக்கலாம். மனித எச்சங்களும் கலண்டரும் புதைகுழி அமைந்துள்ள இடத்தில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இடப்பட்டிருப்பதற்கான சாத்தியம் உள்ளது.

அணுகலை உறுதிப்படுத்தல்: புதைகுழி அமைந்துள்ள இடத்தில் நடைபெறும் செயன்முறைகள் பற்றிய தகவல்களையும் அவ்விடத்திற்கான அணுகலையும் ஊடகங்களுக்கும் காணாமல் போனவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினது குடும்பங்களுக்கும் தாம் கிரமமான அடிப்படையில் வழங்குகின்றனர் என்பதை இரகசியப் புதைகுழியின் விசாரணையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். விசாரணைச் செயன்முறை பற்றிய வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதும் செயன்முறை தொடர்பாக நம்பகத்தன்மையினை ஏற்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

நேரம் மற்றும் ஊழியம்: அகழ்வுப் பணிகள், குறிப்பாக, சந்தேகத்துக்குரிய பல உடல்கள் காணப்படுகையில் அல்லது இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்தில் பௌதிக ரீதியாகச் சிக்கற்தன்மை காணப்படுகையில் (உதாரணமாக கிணற்றுக்கு அடியில் அல்லது கண்ணிவெடிகள்

காணப்படுகையில்), அதிக காலத்தினையும் ஊழியத்தினையும் எடுக்கக்கூடியதாக அமைகின்றன. எனவே, அகழ்வுப் பணிகள் பொதுவாக மந்தமான செயன்முறையாக அமையலாம் என்பதுடன் அவற்றுக்குப் பல வாரங்கள் எடுக்கலாம், அதிலும் சிக்கலான பாரிய மனிதப் புதைகுழியாயின் பல மாதங்களும் எடுக்கலாம்.

4. சடலங்களை மீண்டும் தோண்டியெடுத்தல்

நோக்கம்: சான்றுகள் தொலைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் ஒரு தனிநபருக்கு மேற்பட்ட நபர் களின் எச்சங்கள் காணப்படின் அவை ஒன்றுடன் ஒன்று கலக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அனைத்து மனித எச்சங்களையும் அவற்றுடன் இணைந்த பொருட்களையும் மீட்டெடுப்பதே நோக்கமாகும்.

கவனித்துப் பேணுவதற்கான தேவை: மனித எச்சங்களுக்குச் சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகச் சடலங்களை மீண்டும் தோண்டியெடுத்தல் என்பது கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். புதைகுழி அமைந்துள்ள சில இடங்களில், மண் ஈரமாகவும் அமிலத்தன்மை கொண்டதாகவும் காணப்படும். இதனால் எலும்புகள் எளிதில் உடையக்கூடியவையாக இருக்கலாம். விசாரணைச் செயன்முறைக்காக எச்சங்கள் பௌதிக ரீதியாகக் கூறுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். ஆனால், குடும்பத்தினரின் துக்க அனுஷ்டிப்பு மற்றும் இறுதிக் கிரியைகளுக்காக எச்சங்களைக் குடும்பத்தினரிடம் மீள வழங்கும் சாத்தியத்திற்காகவும் அவற்றினைப் பாதுகாப்பது முக்கியமானதாகும்.

பாதுகாப்புப் பொறுப்புச் சங்கிலி: சகல மனித எச்சங்களும் அவற்றுடன் இணைந்த சான்றுகளும் கவனமாகப் பதிவுசெய்யப்பட்டு, பொதிசெய்யப்பட்டு லேபலிடப்பட வேண்டும். விசாரணையின் வாய்மைக்கு இது முக்கியமானதாகும், குறிப்பாகச் சம்பவம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டால். பாதுகாப்புப் பொறுப்பின் சங்கிலியை நிரூபிப்பதுவும் சான்றுகள் சூழ்ச்சித்திறனுடன் கையாளப்படவில்லை அல்லது அவற்றில் மாற்றம் செய்யப்படவில்லை என்பதை நிரூபிப்பதும் முக்கியமானதாகும்

காபன் திகதியிடலும் புதைகுழி அமைந்துள்ள இடத்தின் திகதியைக் கணித்தலும்

குறைந்தது இரண்டு இரகசியப் புதைகுழிகளில் (மாத்தளை மற்றும் மன்னார் சதொச) காணப்பட்ட எலும்புக்கூடுகள் எவ்வளவு காலம் பழமையானவை என்பதைத் தீர்மானிப்பதற்காகக் காபன் திகதியிடலைப் பயன்படுத்துவதற்கு நீதவான் நீதிமன்றத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. காபன் - 14 திகதியிடல் (Carbon-14 Dating) அல்லது ரேடியோகாபன் என்பது, மனித எலும்புகள் உள்ளிட்ட சேதனப் பொருட்கள் எந்த வரலாற்றுக் காலத்துக்குரியவை என்பதை அடையாளம் கண்டு அவற்றின் காலத்தினைக் கணிப்பதற்காகப் பொதுவாகத் தொல்லியலாளர்களினால் பயன்படுத்தப்படுகின்றது. அணுசக்திப் பரிசோதனை காரணமாகச் சுற்றாடலில் ரேடியோ காபன் கணிசமாக அதிகரித்துள்ள காரணத்தினால் ஒரு நபர் நவீன யுகத்தினைச் சேர்ந்தவரா (அதாவது 1945 ஆம் ஆண்டிற்கு பிறகு) என்பதைத் தீர்மானிப்பதும் சாத்தியமாகியுள்ளது.

காபன் திகதியிடல் என்பது உலகில் ஏனைய தேடல் பொறிமுறைகளினால் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பது கட்டாயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். புதைகுழிகளின் காலப்பகுதியினைத் தீர்மானிப்பதற்குச் சூழ்நிலை சார்ந்த தகவல்களுக்கு மேலதிகமாக, மனித எச்சங்களில் இருந்தும் அவற்றுடன் சேர்ந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் இருந்தும் இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்தின் சூழமைவில் இருந்தும் சேகரிக்கப்பட்ட சான்றுகளைப் பயன்படுத்தும் எத்தனிப்பினையே உலக நாடுகள் கொண்டுள்ளன. காபன் திகதியிடல் பயன்படுத்தப்படவுள்ளதாயின், சம்பவம் பற்றிய ஒரு முடிவுக்கு வருவதற்காகப் பரிசோதனை அறிக்கை மாத்திரம் பயன்படுத்தப்படலாகாது என்பதுடன் வெவ்வேறு நிபுணர்களின் பரிசோதனை முடிவுகள் மற்றும் பகுப்பாய்வுகளை ஒருங்கிணைக்கும் ஒரு பரிபூ ரணமான அறிக்கையில் அவ்வாறான கண்டறிதல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

5. பகுப்பாய்வு

நோக்கம்: பாதிக்கப்பட்டவரின் அடையாளம், புதைகுழியின் திகதி, மரணத்திற்கான காரணம் மற்றும் குற்றச்செயலை நிகழ்த்தியிருக்கக் கூடிய சாத்தியமுடையவர்கள் உள்ளிட்ட தீர்க்கமான வினாக்கள் தொடர்பான வெவ்வேறு சான்றுகள் பரிசோதிக்கப்பட்டு ஒரு புனைகோள் உருவாக்கப்படுகின்றது.

விசாரணை ஆளணியினர்: சான்றுகளின் தனிப்பட்ட வகைகள் தொடர்பான அறிவியல் ரீதியான பகுப்பாய்வு விசாரணை அணி உறுப்பினர்களால் பொறுப்பேற்கப்படலாம் அல்லது விசேட விசாரணை நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படலாம். உதாரணமாக, தோட்டாக்கள் அல்லது எறிகணை எச்சங்கள் வெடிபொருள் நிபுணருக்கு அனுப்பிவைக்கப்படலாம். பல எலும்புக்கூடுகள் காணப்படும் ஒரு இரகசிய புதைகுழியாயின் தடயவியல் அலகு இருக்கும் ஒரு பல்கலைக்கழகத்திற்கு அப்புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட உடல் எச்சங்கள் அனுப்பிவைக்கப்படலாம்.

மனித எச்சங்களைப் பரிசோதித்தல்: இரகசிய புதைகுழியில் இருந்து கிடைத்த எலும்புக்கூட்டு எச்சங்களைப் பரிசோதிக்கையில், பாதிக்கப்பட்டவரின் அடையாளப்படுத்தும் அம்சங்களைத் தீர்மானிப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு இறந்தனர் என்பதைத் தீர்மானிப்பதற்கும் நிபுணர்கள் முயற்சிப்பர். ஒவ்வொரு எலும்புக்கூட்டிற்குமான உயிரியல் ரீதியான விபரங்களை அறிவதற்குப் பகுப்பாய்வாளர்கள் முயற்சிப்பர். அடிவேதனைப் படுகாயம் உள்ளதா என்பதை அறிவதற்காகவும் எச்சங்கள் பரிசோதிக்கப்படும்.

உயிரியல் விபரங்கள்

பாதிக்கப்பட்டவரின் பால், இறப்பின் போதான பொதுவான வயது மற்றும் தனிநபரின் உடலுயர்வளவு ஆகியவற்றினை உயிரியல் விபரங்கள் உள்ளடக்குகின்றன. எலும்புக்கூடாகியுள்ள எச்சங்களைப் பொறுத்த அளவில், வெவ்வேறு எலும்புகளின் பரிசோதனை மூலமும் அளவீடு மூலமும் இது பொறுப்பேற்கப்படுகின்றது என்பதுடன் இது தடயவியல் மானுடவியலாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படுவதே மிகவும் சிறந்ததாகும். உதாரணமாக, பிள்ளை ஒன்றின் எலும்புக்கூட்டின் எலும்பு வளர்ச்சியினதும் பல் முளைக்கத் தொடங்கியமையினதும் அவதானிப்புக்களைப் பயன்படுத்தி வயது வீச்சினைத் தீர்மானிக்க முடியும். இடை எலும்பு மற்றும் மண்டையோடு ஆகியவற்றினைக் கொண்டு பால் வேறுபாட்டினை அறிய முடியும்.

எலும்புப் படுகாயங்களின் பல்வேறு வகைகள்

எலும்புகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதா என நிபுணர்கள் ஆராயலாம். இது படுகாயம் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. மேலும் வேறு ஏதாவது விலகல்கள் உள்ளனவா எனவும் ஆராயலாம். இவை நோய்க்குறியாக இருக்கலாம் (உதாரணமாக, சில குறிப்பிட்ட எலும்புகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியிருப்பது மூட்டு வீக்கத்தினால் ஏற்பட்டதாக இருக்கலாம்). படுகாயங்களில் மூன்று வகைகள் உள்ளன:

இறப்பின் முன்பதான நிலையறி செயற்பாடு: இறப்பிற்கு முன்னர் ஏற்படும் படுகாயம். உதாரணமாக, குறிப்பிட்ட நபர் சிறுபிள்ளையாக இருக்கையில் விழுந்திருந்து அவரின் கையில் முறிவேற்பட்டிருந்தால், முறிவினையும் மீள்வளர்ச்சியையும் அவதானிக்கக்கூடிய நிபுணரால் இது அடையாளம்; காணப்படலாம்.

மரணத்துடன் தொடர்புறு இறப்பின் காரணிகள் நிலையறி செயற்பாடு: இது இறப்பு நேர்கையில் ஏற்படும் படுகாயமாகும். உதாரணமாக, எலும்பு சேதமடைந்திருக்கும் விதம் நிகழ்த்தப்பட்ட வன்முறையின் வடிவத்தினையும் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் வகையினையும் சுட்டிக்காட்டும். குத்தப்பட்டதாலா அல்லது துப்பாக்கிச் சூட்டினாலா சேதம் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பகுப்பாய்வு வெளிக்கூறும்.

இறப்பின் பின்னர் உடலத்தில் மற்றும் உடற்கூறுகளில் ஏற்பட்ட சூழலியல் சார் மாற்றம் குறித்த நிலையறிதல் செயற்பாடு: இறப்பின் பின்னர் எலும்புகளுக்கு ஏற்படும் பெருங்காயம். இது விலங்குகளினால், தாவர வளர்ச்சியினால் அல்லது மனித இடையீடுகளினால் ஏற்பட்டதாக இருக்கலாம். உதாரணமாக, சவலைப் பயன்படுத்துகையில் எலும்பினைத் தற்செயலாகச்

சேதப்படுத்திய விவசாயி ஒருவரினால் எலும்புக்கூடொன்று கண்டுபிடிக்கப்படல். எலும்பு சேதப்படுத்தப்பட்ட விதம், குறிப்பாக, நிறம் மற்றும் இழைம அமைவு ஆகியன இந்தச் சேதம் இறப்பின் பின்னர் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டும்.

ஏற்படக் கூடிய உணர்வு ரீதியான சவால்கள்

புதைகுழி அமைந்துள்ள இடத்திற்கு விஜயம் செய்வது குடும்ப உறுப்பினர்களுக்கு மிகுந்த மனத் துயரினை ஏற்படுத்துவதாக அமையலாம். அவர்களின் அன்புக்குரியவர்களின் உடல்கள் அங்கே புதைக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை அவர்கள் அறியாதிருந்தாலும் கூட இவ்வாறான நிலை ஏற்படலாம். சில குடும்பங்கள் போக விரும்பலாம் ஆனால் அவர்கள் கலப்பு உணர்வுகளைக் கொண்டிருக்கலாம். எலும்புக்கூட்டு எச்சங்களைப் பார்ப்பது குறிப்பாகக் கஷ்டமானதாக இருக்கலாம் என்பதால் ஒருவர் தன்னை இதற்காகத் தயார்படுத்துவது முக்கியமானதாகும்.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், விசாரணை அதிகாரிகள் குடும்பங்களைக் கட்டுப்படுத்துபவர்களாக அல்லது அவர்கள் மீது ஆக்ரோஷமுடையவர்களாகக் கூட இருக்கலாம். சம்பவம் பற்றிய அடிப்படைத் தகவல்களை அவர்கள் பகிர்வதற்கு மறுக்கலாம். சம்பவ நிலை பற்றி அறிவதற்கான மற்றும் தாம் எவ்வாறு உதவலாம் என்பதற்கான குடும்பத்தினரின் முயற்சிகளுக்கு இது அதிருப்தியளிக்கலாம். இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்திற்கு விஜயம் செய்வதற்குக் கூடக் குடும்பங்கள் தடுக்கப்படலாம். சான்றுகள் மாற்றப்படுகின்றன அல்லது சூழ்ச்சித்திறத்துடன் பயன்படுத்தப்படுகின்றன என்ற அச்சத்தினை இது அதிகரிக்கலாம். குடும்பத்தின் பங்குபற்றல் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவாறாக, காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சில குறிப்பிட்ட உரிமைகளைக் கொண்டுள்ளன, ஆனால் ஒவ்வொரு சம்பவத்திலும் எவ்வளவு அணுகலும் பங்குபற்றலும் வழங்கப்படும் என்பதை அதிகாரிகளே தீர்மானிப்பர்.

---

6. அடையாளப்படுத்தல்

நோக்கம்: இரகசியப் புதைகுழியில் உள்ள மனித எச்சங்களை விசாரணையாளர்கள் அடையாளம் கண்டு, அந்த எச்சங்கள் காணாமற் போன நபருடன் பொருந்துகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்

கருவிகள்: பின்வருவன உள்ளிட்ட பல முறைகள் அடையாளப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படலாம்:

i. காணாமல் போனவரின் சில குறிப்பிட்ட உடல் அடையாளங்களை ஒப்பிட்டு இவற்றினை எலும்புக்கூட்டுடனும் அதனுடன் இணைந்த பொருட்களுடனும் பொருத்திப் பார்த்தல். இவ்வகையான தனிப்பட்ட தகவல்கள் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களாலேயே வழங்கப்படுகின்றன. உதாரணமாக, காணாமல் போன நபருக்கு உடைந்த பல் இருந்திருந்தால், அல்லது அவரின் முறிந்த வலது புஜத்தில் தாயத்துக் கட்டப்பட்டிருந்தால். கடந்த காலங்களில் கண்களால் பார்த்து அடையாளங் காண் பதே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு, நபர்களின் ஆடைகளைக் கொண்டும் தனிப்பட்ட பாவனைப் பொருட்களைக் கொண்டும் அவர்கள் அடையாளம் காணப்பட்டனர். தற்போது, பல காரணங்களினால், தனிப்பட்ட பாவனைப் பொருட்களை விட உயிரியில் ரீதியான குறிகாட்டிகளே மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இதில், தனிப்பட்ட பாவனைப் பொருட்கள் அடக்கம் செய்யப்படுகையில் இடமாற்றப்படலாம் என்ற காரணமும் அடங்குகின்றது.

ii. நபர் எப்போது காணாமல் போனார் என்ற சூழ்நிலையினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் புதைகுழியைச் சுற்றி நடந்த நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்தல் ஒரு கால ஒழுங்கினை உருவாக்குவதற்கான முக் கியமான சான்றினை வழங்கலாம்.

iii. மனித எச்சங்களின் டிஎன்ஏ யினைக் குடும்ப உறுப்பினர்கள் என ஊகிக்கப்படுபவர்களின் டிஎன்ஏ யுடன் பொருத்திப் பார்த்தல்.

சாதகமான பொருத்தம்: மேலேயுள்ள கருவிகளில் ஒன்றில் மாத்திரம் சார்ந்திருப்பதற்கு பதிலாக, அடையாளப்படுத்தலின் உயர் நிகழ்தகவினை அடைவதற்குப் பல முறைகளைப் பயன்படுத்துவது

சிறந்ததாகும். உதாரணமாக, ஒன்று விட்ட சகோதரர்கள் இருவர் காணா மால் போயிருந்து, அவர்களின் டிஎன்ஏ மாதிரிகள் ஒரு முடிவினைத் தராத நிலையில், அடையாளப்படுத்தலின் ஏனைய முறைகளைப் பயன்படுத்துவது சாதகமான பொருத்தத்தினை வழங்கலாம். இது, இறப்பின் முன்பதான நிலையறி செயற்பாடுடன் தொடர்பான காயங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கலாம்.

குடும்பங்களுக்கு அறிவித்தல்: மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதும் குடும்பங்களுக்கு அறிவிக்கும் விடயத்தில் அதிகார அமைப்புக்கள் போதிய கவனம் செலுத்த வேண்டும். இது கூருணர்வுடனும் முன்னுரிமை அடிப்படையிலும் பொறுப்பேற்கப்பட வேண்டும் ஏனெனில் குடும்பங்கள் ஊடகங்களிடம் இருந்தும் ஒரு மூன்றாம் தரப்பிடம் இருந்தும் செய்தியினைக் கேள்விப்படுவதற்கு பதிலாக அவர்களுக்கே செய்தி முதலில் அறிவிக்கப்பட வேண்டும். ஆற்றுப்படுத்தல் உதவி குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.

அடையாளப்படுத்தலுக்காக டிஎன்ஏ யினைப் பயன்படுத்தல்

டிஎன்ஏ பகுப்பாய்வு அடையாளப்படுத்தலுக்கான ஒரு பிரபலமான கருவியாக மாறியுள்ளது. ஒவ்வொரு நபரினதும் டிஎன்ஏ தனித்துவமானது. மனிதர்கள் அவர்களின் டிஎன்ஏ யில் அரைவாசியினைத் தந்தையிடமிருந்தும் அரைவாசியினைத் தாயாரிடம் இருந்தும் வரித்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு பிள்ளையும் அதன் சொந்த டிஎன்ஏ கலப்பினைக் கொண்டிருக்கும்.

டிஎன்ஏ பகுப்பாய்விலும் அதற்கேயுரிய வரையறைகள் உள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூட்டில் இருந்து எடுக்கப்பட்ட டிஎன்ஏ யினை மாத்திரம் அது யாருடைய உடல் என்பதை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்த முடியாது. இந்த டிஎன்ஏ மற்றொரு மாதிரியுடன் ஒப்பிடப்பட வேண்டும் என்பதுடன் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுடன் ஒப்பிடப்பட வேண்டும். இவர்கள் தனிநபர்களின் பெற்றோர்கள் அல்லது காணாமல் போன நபரின் பிள்ளைகள் போன்ற நெருக்கமான இரத்த உறவுகளாகும். காணாமல் போன நபர் திருமணமானவராயின், அவரின் மனைவியின் டிஎன்ஏ அல்லது அவரின் தத்துப் பிள்ளைகளின் டிஎன்ஏ இனைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அந்த உறவுகள் திருமணத்தினால் வந்தவையாகுமேயன்றி இரத்த உறவுகளல்ல.

அவரின் இரண்டு பெற்றோர்களிடமிருந்தும் மாதிரிகளைப் பெறுவதற்காக அவர்கள் அணுகப்படலாம். அவரின் சொந்தப் பெற்றோர்கள் உயிருடன் இல்லாதிருந்து அவருக்குச் சொந்தப் பிள்ளைகள் இருந்தால், அவர்களின் டிஎன்ஏ இனை அவரின் மனைவியின் டிஎன்ஏ உடன் சேர்த்து அந்த நிலையில் பயன்படுத்தலாம் (ஏனெனில், அவர்களின் பிள்ளைகளுக்கு இருவரிடமும் இருந்தான டிஎன்ஏ இருக்கும்). நெருங்கிய உறவினர்கள் இல்லாவிடின், ஒன்று விட்ட சகோதர சகோதரிகள் போன்ற தூரத்து உறவினர்கள் மாதிரியினை வழங்கலாம்.

குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து டிஎன்ஏ யினைப் பல்வேறு வழிகளில் சேகரிக்க முடியும். மிகவும் பொதுவான மற்றும் வலியற்ற முறையே கன்னங்களின் உட்பகுதியில் (கொடுப்புக்களில்) பஞ்சினைத் தேய்த்தெடுத்தலாகும். தடித்த எலும்புகளில் இருந்து டிஎன்ஏ பெறப்படுவது மிகவும் சிறந்ததாகும், அதாவது, தொடையெலும்பு, கையின் மேற்புற எலும்பு அல்லது பற்கள் போன்றவை. அமில மண் காரணமாக எலும்புக்கூட்டு எச்சங்கள் எரிந்திருந்தால் அல்லது கடுமையாகச் சேதமடைந்திருந்தால், அப்போது சிறந்த டிஎன்ஏ மாதிரியினைப் பெறுவது கடினமானதாக இருக்கும் அல்லது டிஎன்ஏ மிகவும் தரம் குன்றியதாக இருக்கும். எலும்புகளில் இருந்து டிஎன்ஏ இனைப் பெறுவது விசேடத்துவம் மிக்கதும் சிக்கல்மிக்கதுமாகும். இதற்கு விசேட ஆய்வுகூடம் தேவையாகும்.

டிஎன்ஏ தொடர்பாகப் பணியாற்றும் பல்வேறு அமைப்புக்கள் இலங்கையில் இருந்தாலும் (அரச பகுப்பாய்வுத் திணைக்களம் அல்லது ஜெனிடெக் போன்ற தனியார் அமைப்புக்கள்), இவ்வகையாகத் தேவைப்படுத்தப்படும் பரிசோதனைகளைப் பொறுப்பேற்பதற்கு அவற்றிடம் நிபுணத்துவம் இல்லாதிருக்கின்றது. எனவே, டிஎன்ஏ பிரித்தெடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்படுகின்ற வெளிநாட்டு ஆய்வுகூடத்திற்கு அரசு ஒரு சிறிய எலும்பு மாதிரியினை அனுப்பி வைக்கலாம். இது செலவுமிக்க ஒரு செயன்முறையாகும்.

உணர்வு ரீதியாகக் கடினமான செயன்முறை

அடையாளப்படுத்தும் செயன்முறை வலிமிக்கதாகவும் செயன்முறைப்படுத்தக் கடினமானதாகவும் இருக்கலாம். உதாரணமாக, காணாமல் போன தமது உறவினர் எவ்வாறான தோற்றமுடையவர் எனவும் அவரின் இளமைக் காலத்தில் அவருக்கு என்ன காயம் ஏற்பட்டது எனவும் விசாரணையாளர்கள் குடும்ப உறுப்பினர்களைக் கேட்கையில், அவற்றினை நினைவுபடுத்துவது உணர்வு ரீதியாக வலிமிக்கதாக இருக்கலாம். இதேபோன்று, ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் போன்ற அன்புக்குரியவரின் தனிப்பட்ட பாவனைப் பொருட்களை அடையாளம் காண வேண்டியிருப்பதும் இதயத்தைக் கசக்கிப் பிழிவதாக அமையலாம். அன்புக்குரியவரைக் கடைசியாகக் கண்ட போது அவர் என்ன நிற சேர்ட்டினை அணிந்திருந்தார் போன்ற மிகத் தெளிவானதாகத் தோன்றும் சில குறிப்பிட்ட விபரங்களை நினைவுகூர்வது கடினமானதாக இருக்கலாமென்றாலும் இது அசாதாரணமானதல்ல. சில வேளைகளில், அவர்கள் தமது ஞாபகங்கள் தொடர்பாகச் சந்தேகம் கொண்டிருக்கலாம்.

தனிநபர் ஒருவரின் எச்சங்கள் சாதகமாக அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில், தமது அன்புக்குரியவருக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை இறுதியாகக் கண்டு பிடித்தது குடும்பங்களுக்கு மிகுந்த மன வேதனையினை அளிக்கக் கூடியதாக இருக்கலாம். குடும்பங்கள் உண்மையை அறிந்து கொள்ள விரும்பினாலும், தமது அன்புக்குரியவர் உயிருடன் உள்ளார் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. எதிர்பார்ப்புக்களுக்கும் மோசமான அச்சங்களுக்கும் இடையில் பல வருடங்கள் வாழ்வினைக் கழித்த பின்னர், அவர்கள் இழப்பினை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். உடலுக்கு பதிலாக ஒரு சவப்பெட்டியைக் கூட நிரப்பாத எலும்புக் கூட்டத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கையில் எச்சங்களைக் கையளிப்பது என்பது மிகவும் கடினமானதாக இருக்கலாம். இருப்பினும், என்ன நடந்தது என்பதை இறுதியில் கண்டுபிடிப்பது நிச்சயமான தன்மையினையும் மன ஆறுதலையும் வழங்கலாம்.

7. எச்சங்களைக் கையளித்தல்

நோக்கம்: துக்கம் அனுஷ்டிப்பதற்காகவும் தமது அன்புக்குரியவர்களுக்குப் பிரியாவிடை வழங்குவதற்காகச் சமயக் கிரியைகளையும் கலாசாரச் சடங்குகளையும் நடத்துவதற்காகவும் குடும்ப உறுப்பினர்களிடம் எச்சங்களைக் கையளித்தல். காணமால் போதல் இடம்பெற்ற வேறு நாடுகளில், இரகசியப் புதைகுழி விசாரணைச் செயன்முறையில் எச்சங்களைக் கையளித்தல் மிகவும் முக்கியமான ஒரு கட்டமாகக் கருதப்படுகின்றது.

எச்சங்களைப் பாதுகாத்தல்: நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைகளில் அல்லது நீதிமன்றச் செயன்முறைகளில் சான்றுகளின் முக்கியமான பாகமாக எச்சங்கள் அமைகின்ற காரணத்தினால், அவற்றினைத் தகனம் செய்ய முடியாது ஆனால் அவை பொதுவாகப் புதைக்கப்பட்டு அந்த இடம் தெளிவாக அடையாளம் காணப்படத்தக்கவாறு பேணப்படுகின்றது.

கையளித்தல் செயன்முறை: சில குடும்பங்கள் எச்சங்களைத் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ள விரும்புவதாலும் ஏனையவர்கள் பொதுச் சூழ்நிலையில் பெற்றுக்கொள்ள விரும்புவதாலும் எச்சங்களைக் கையளிக்கும் செயன்முறையினை ஏற்பாடு செய்வதில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

சடங்குகள்: சில குடும்பங்கள் அவற்றின் அன்புக்குரியவர்களின் எச்சங்களைப் பெற்றுக்கொள்கையில் ஈமச் சடங்குகளுடன் தொடர்புடைய சடங்குகளை இறுதியில் நடத்தக் கிடைத்தமையினையிட்டு ஆறுதல் அடையலாம். இவ்வாறான சடங்குகள் தமது அன்புக்குரியவர்களுக்காகத் துக்கம் அனுஷ் டித்து அவர்களை நினைவுகூர்வதற்கான அவகாசத்தினை வழங்குகின்றது, அத்துடன் இழப்புக்கான பகிரங்க அங்கீகாரத்தினையும் வழங்குகின்றது.

அனுதாபமற்ற சமூகம்

காணாமல் போனவர்களின் மற்றும் காணமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குச் சமூகச் சூழல் என்பது சவால்மிக்கதாக இருக்கலாம். பிணத்தினைத் தோண்டியெடுக்கும் செயன்முறைகள் சில குறிப்பிட்ட சமுதாயங்களில் சிக்கல்மிக்கதாக மாறலாம். இவற்றில் அடக்கம் செய்யப்பட்ட எச்சங்கள் மீண்டும் தோண்டி எடுக்கப்படுவது தொடர்பான சமயக் கட்டுப்பாடுகள் அல்லது சமூகக் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. மிக ஆழ்ந்த அனுதாபம் காட்டக் கூடிய பரிச்சயம் கொண்டவர்கள் கூட காணாமல் போதலை அனுபவிப்பதன் வலியைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கலாம்.

எனவே, குடும்பங்கள் அவர்களது தனிப்பட்ட உணர்வுகளையும் குடும்ப இயங்கியல்களையும் மாத்திரம் கையாள வேண்டியிருப்பதில்லை, அத்துடன் சமூக எதிர்பார்ப்புக்களையும் பக்கச்சார்புகளையும் சேர்த்தே கையாள வேண்டியிருக்கின்றது. இச் செயன்முறையை இது கடினமானதாக ஆக்குகின்றது.

சமயச் சடங்குகளை அனுமதிப்பதற்கு அல்லது அவற்றில் பங்குபற்றுவதற்கு சமயத் தலைவர்கள் அல்லது சமயச் சமுதாயங்கள் விரும்பாதிருக்கையில், துக்கம் அனுஷ்டிக்கும் செயன்முறை மேலும் சிக்கலாக்கப்படலாம். மரணச் சடங்குகள் மறுக்கப்படல் அல்லது உதவியற்ற நிலையினை உணர்தல் குடும்பங்களுக்கு மேலதிக மன வலியினை ஏற்படுத்தலாம். இவ்வாறான சவால்களைக் கையாளுவதற்கு நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட, வெவ்வேறு வகையான உணர்வு ரீதியான மற்றும் சமூக ரீதியான வளங்கள் தேவைப்படலாம். அர்த்தமுள்ள சடங்குகளைப் பொறுப்பேற்பதற்குக் குடும்பங்களுக்கு அவகாசம் உள்ளது என்பது முக்கியமானதாகும்.

குடும்பப் பங்கேற்பின் முக்கியத்துவம்

இரகசியப் புதைகுழிகளின் விசாரணையில் குடும்பங்கள் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகிக்கலாம் மற்றும் வகிப்பதற்குக் கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாகத் தேசிய மற்றும் சர்வதேசச் சட்டத்தில் பதியப்பட்டுள்ளதும் குடும்பங்களுக்கு உரித்தானதுமான குறிப்பிட்ட உரிமைகளையும் கடப்பாடுகளையும் குடும்பங்கள் கொண்டுள்ளன. பிரதான உரிமைகளை உள்நாட்டுக்குரியதாக ஆக்கிய, 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வலிந்து காணாமலாக்கப்படுவதில் எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்தினை அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இந்த உரிமைகளில் சில உள்ளடக்குபவை:

- உண்மையினை அறிவதற்கான உரிமை,காணாமல் போனவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கான உரிமை

- அரசாங்கம் நடத்த வேண்டிய உத்தியோகபூர்வ விசாரணைக்கான உரிமை

- இழப்பீட்டுக்கும் நியாயமான நட்டஈட்டுக்குமான உரிமை

- காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிப்பதற்கென்றேயான சங்கங்களை உருவாக்குவதற்கும் அவற்றில் அங்கம் வகிப்பதற்குமான உரிமை

- அடிப்படை உரிமையாக அதிகரித்த அளவில் அங்கீகரிக்கப்பட்டு வரும், துக்கம் அனுஷ் டிப்பதற்கான உரிமை

இந்த உரிமைகள் குடும்பங்களின் வெவ்வேறு தேவைகளைப் பரந்த அளவில் பிரதிபலிக்கின்றன. உரிமைகளுக்கு இடையில் தெரிவுகளை மேற்கொள்வதற்குக் குடும்பங்கள் நிர்ப்பந்திக்கப்படலாகாது. எனவே, நட்டஈட்டுக்கு விருப்பம் தெரிவிப்பதால், உண்மைக்கும் நீதிக்குமான தமது உரிமையினைக் குடும்பங்கள் நீக்குகின்றன என்று அர்த்தமாகி விடாது.

குடும்பங்கள் விசாரணையில் பல முக்கியமான செயற்பாடுகளை நிறைவேற்றலாம்:

- **சூழமைவு சார்ந்த தகவல்களை விசாரணையாளருக்கு வழங்குதல்:** சம்பவத்தின் சூழமைவினை மீளக் கட்டமைப்பதற்கு விசாரணையாளர்களுக்கு உதவக் கூடிய இன்றியமையாத சூழமைவு சார்ந்த தகவல்களைக் குடும்பங்கள் கொண்டிருக்கும். இத்தகவல்களுள், பிரதேசத்தில் இயங்கும் துணை இராணுவத் தளபதிகள் யார் மற்றும் காணா மல் ஆக்கப்படல் நிகழ்ந்த போது நடந்த பிரதான நிகழ்வுகள் போன்ற பின்புலத் தகவல்களாக இவை இருக்க முடியும். புதைகுழி அமைந்துள்ள காணித் துண்டின் வரலாற்றினையும் இது கொண்டிருக்கலாம்.

- **காணாமல் போன அல்லது காணாமலாக்கப்பட்ட நபர்கள் பற்றிய தகவல்களை வழங்கல்:** விசாரணை தொடர்ந்து நடைபெறுகையில் இரகசிய புதைகுழியில் உள்ள மனித எச்சங்கள் தொடர்பில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குறிப்பிட்ட நபர்கள் மீது விசாரணை கவனம் குவிக்கலாம்.

- காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகள், உடல் சார்ந்த அம்சங்கள் மற்றும் ஏனைய தனித்துவமான அம்சங்கள் போன்ற முக்கியமான தகவல்களை வழங்குமாறு விசாரணையாளர்கள் குடும்பங்களைக் கோரலாம். அடையாளப்படுத்தலை நோக்கிச் சம்பவங்கள் நகர்கையில், குடும்பங்களிடம் இருந்து டிஎன்ஏ வேண்டப்படலாம்.

- **ஏனைய சம்பவங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்:** யாருமே அறிந்திராத இன்றியமையாத தகவல்களைக் குடும்பங்கள் கொண்டிருக்கலாம். இதில் இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடமாக இருக்கும் சாத்தியமுடைய இடங்கள் பற்றிய தகவல்கள் அடங்குகின்றன. இந்த இடங்கள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் காணாமல் போன ஏனைய நபர்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

- **குடும்பங்களை விசாரணைகளுடன் தொடர்புபடுத்தல்:** காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பச் சங்கங்களின் பிரதிநிதிகள், குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புற்றுள்ள குடும்பங்களுடன் விசாரணையாளர்களைத் தொடர்புபடுத்துவதற்கு உதவலாம். அதிகார அமைப்புக்கள் பற்றிய அவநம்பிக்கை காணப்படுகையில், குடும்பத்தினரின் நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் விசாரணை அணி பெற்றுக்கொள்ள உதவுவதில் இந்தத் தொடர்புகள் இன்றியமையாததாக அமையலாம்.

- **விசாரணைகளுக்கு நம்பகத்தன்மையினை வழங்கல்:** இரகசியப் புதைகுழியில் குடும்பங்களின் ஈடுபாடு காணப்படுதல் விசாரணைகளுக்கு நம்பகத்தன்மையினை வழங்கலாம், குறிப்பாக, அரசு தொடர்பாகவும் விசாரணை முகவர்கள் தொடர்பாகவும் சந்தேகங்கள் ஆழமாக வேரூன்றியுள்ள இலங்கை போன்ற சூழமைவில் இது நம்பகத்தன்மையினை வழங்கலாம். இவ்வாறான சம்பவங்களில் குடும்பங்களின் அர்த்தபூர்வமான ஈடுபாடு, விசாரணைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீனம் தொடர்பாகக் காணப்படும் கரிசனைகளை அகற்றுவதற்கு உதவலாம்.

குடும்பங்கள் எவ்வாறு பங்குபற்றலாம்?

நடைபெற்று வரும் சில வழக்குகளில் குடும்பங்கள் பங்குபற்றத்தான் செய்கின்றன என்றாலும், அதிகாரிகள் இவற்றினைச் சில சமயங்களில் ஒரு சுமையாகவும் தேவையற்றதாகவும் நோக்குகின்றனர். ஆனால், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இது உண்மையிலேயே விசாரணைச் செயன்முறையினை வலுப்படுத்துகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகளையும் உள்ளடக்கி, குடும்பங்கள் அவற்றின் உரிமைகளைப் பெற்றுக்கொள்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அதிகமான ஆதரித்துவாதாடல் இருக்க வேண்டும்.

இரகசியப் புதைகுழிகள் தொடர்பாக நடைபெற்று வரும் நீதிமுறை விசாரணைகளில் சட்ட ரீதியாக இடையீடு மேற்கொள்ளல்: புதைகுழி அமைந்துள்ள இடங்கள் தொடர்பான விசாரணை நீதிமுறை விசாரணையாகப் பொதுவாக மாறுகின்ற இலங்கை போன்ற நாடுகளில் இவ்வாறான வழக்குகளில் இடையீடு மேற்கொள்வது குடும்பங்களுக்குச் சாத்தியமானதாகும். இந்தப் பிரதிநிதித்துவம் குடும்பங்கள் விசாரணைச் செயன்முறையில் அதிக அணுகலைக் கொண்டிருப்பதற்கு அனுமதிப்பதுடன் குடும்பங்கள் செயன்முறையில் ஏதாவது பிரச்சினைகளைக் கண்டால் அல்லது அவர்கள் ஏதாவது விசேட வேண்டுகோள்களைக் கொண்டிருந்தால், தமது சட்டத்தரணிகளின் மூலம் தங்களின் பிரச்சினைகளையும் கரிசனைகளையும் எழுப்ப முடியும். விசாரணைகளின் ஆரம்பத்தில், குடும்பங்களையும் குடும்பச் சங்கங்களையும் அவற்றின் அன்புக்குரியவர்களின் புதைகுழிகளுடன் இணைக்கும் போதிய தகவல்கள் அவற்றிடம் இல்லாதிருக்கலாம். எவ்வாறாயினும், தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்குப் போதிய தகவல்கள் தமக்குக் கிடைக்கும் வரை வழக்கினைப் பின்தொடர்வதற்காக அவர்கள் இடையீடு மேற்கொள்ளலாம், அல்லது பாதிக்கப்பட்ட ஏனையோரின் சார்பில் அவர்கள் அவ்வாறு செய்யலாம், அல்லது செயற்திறன்மிக்க விசாரணைச் செயன்முறையினை உறுதிப்படுத்த அவரகள் அவ்வாறு செய்யலாம்.

இடையீடு செய்வதற்கான உரிமை

இரகசியப் புதைகுழி வழக்குகளில் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டிய குடும்பங்களின் உரிமை இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மன்னார் சதொச பாரிய மனிதப் புதைகுழி வழக்குத் தொடர்பில் 2022 பெப்ரவரியில், பங்குபற்றுவதற்கான குடும்பங்களின் உரிமைகளையும் நீதிமன்றத்தில் அவர்களின் நலன்கள் ஒரு சட்டத்தரணியினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கான உரிமையினையும் வவுனியா மேல் நீதிமன்றம் (HCV/REV/327/20) அங்கீகரித்தது. இடையீடு செய்வதற்கான இந்த உரிமை, தமது அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மையினை அறிந்துகொள்வதற்கும் அவர்கள் எங்கே இருக்கின்றனர் என்பதை அறிந்துகொள்வதற்கும் பல வருடங்களாகத் தேடல் மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு முக்கியமானதாகும்.

காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினர் இவ்வாறு செய்வதற்கு, அவர்களின் சார்பில் ஆஜராகும் ஒரு சட்டத்தரணியினை அவர்கள் அடையாளம் காணவேண்டும். இச்சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆஜராகுவதோடு இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்தில் நடைபெறும் விசாரணைகளையும் அவதானிப்பார். சட்டத்தரணி குடும்பத்தினரின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வார். இதில், வழக்கு முறையாக விசாரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஆலோசனைகளை வழங்குதல் உள்ளடங்குகின்றது. வழக்கில் சிறந்த வெளிப்படைத்தன்மை உள்ளது காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் ஏனைய குடும்பத்தினர்கள் தகவல்களுக்கான அணுகலைக் கொண்டுள்ளனர் என்பதையும் இது உறுதிப்படுத்தலாம்.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினர்கள் இரகசிய புதைகுழியில் இருப்பது தமது அன்புக்குரியவரே என்பதையிட்டு உறுதியாக அறியாத போதும் கூட அவ்வாறான வழக்கில் இடையீடு செய்வதற்கான உரிமையினைக் கொண்டுள்ளனர். இலங்கைச் சட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்டுள்ள தரப்பு (நேரடியாகப் பாதிக்கப்பட்ட நபர்) இடையீடு செய்யும் தரப்பாக இருப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் யாரென்பது தெளிவாகத் தெரியும் ஏனைய வழக்குகளைப் போலல்லாது, இரகசியப் புதைகுழி வழக்கில், இது மிகவும் சிக்கல்மிக்கதாகும் ஏனெனில் புதைகுழியில் உள்ளது யாரின் மனித எச்சம் என்பது தெளிவற்றதாக இருப்பதால் ஆகும்.

எச்சங்களின் அடையாளம் ஒரு விசாரணைச் செயன்முறை மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். இதற்குத் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களின் உதவி தேவைப்படுகின்றது. எனவே, இவ்வாறான குடும்பங்களினால் எண்ணற்ற முன்னைய புதைகுழி வழக்குகளிலும் நடைபெற்று வரும் புதைகுழி வழக்குகளிலும் இடையீடு செய்யக் கூடியதாக இருந்துள்ளது.

2020 மார்ச் மாதம், மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நடந்த மன்னார் சதொச பாரிய மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புடைய குடும்பங்களின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளிடம் அவர்களால் இனிமேல் இடையீடு மேற்கொள்ளும் மனுதாரர்களாக இருக்க முடியாது என அறிவிக்கப்பட்டது. சட்டமா அதிபர் மேற்கொண்ட ஒரு சமர்ப்பணத்தினைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதாவது, எச்சங்களின் காபன் திகதி கணித்தல் தொடர்பான ஆய்வுகூட அறிக்கையானது, புதைகுழி நவீன புதைகுழியாக இருப்பதை விட வரலாற்று ரீதியான புதைகுழியாக உள்ளது எனக் காட்டியுள்ளது என அச்சமர்ப்பணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர்கள் இந்த வழக்குடன் தொடர்புபடுத்தப்படவில்லை. குடும்பத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகள் மன்னார் வழக்கில் ஆஜராகுவதில் இருந்தும் இத்தீர்மானம் அவர்களைச் செயற்திறனுடன் தடுத்திருக்கின்றது. இதனால், தீர்மானத்தினை மீளாய்வு செய்யுமாறு கோரிச் சட்டத்தரணிகள் வவுனியா உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றினைத் தாக்கல் செய்தனர். அவர்கள் விசாரணை மீது தடையுத்தரவொன்றினையும் வேண்டினர். தடையுத்தரவு வழங்கப்பட்டதுடன் சதொச வழக்கு முன்னெடுத்துச் செல்லப்படுவது

தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டது. 2022 பெப்ரவரியில், வழங்கப்பட்ட வவுனியா மேல் நீதிமன்றத் தீர்மானம் ஒரு முக்கியமான முன்னுதாரணத்தினை நிர்ணயித்து இவ்வாறான வழக்குகளில் குடும்பங்கள் இடையீடு மேற்கொள்வதற்கான உரிமையினை உறுதிப்படுத்துவதிலும் உண்மை மற்றும் நீதிக்கான அவர்களின் பரந்த உரிமையினை உறுதிப்படுத்துவதிலும் ஒரு வெற்றியாக அமைந்தது.

விசாரணையினை முன்னெடுப்பதில் உதவுதல்:
நடைபெற்று வரும் விசாரணைகளில் இடையீடு மேற்கொள்வதற்கு மேலதிகமாக, காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்கள் விசாரணைகளை முன்னெடுப்பதில் ஒரு முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கின்றன. இந்த நூலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல், குடும்பங்கள் பொதுவாகப் பல்வேறு தெரிவுகளையும் பயன்படுத்தி ஓய்ந்து, விசாரணைகள் முன்னெடுக்கப்படலாம் என்பதற்காகப் பல்வேறு அரச அதிகார அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை உணர்த்துவதற்கு முயற்சித்துள்ளன.

ஒரு இரகசிய புதைகுழி உள்ளது என்பதற்கான நம்பத்தகுந்த சான்றினைக் குடும்பங்கள் கொண்டிருக்கையில், ஒரு விசாரணையினை முன்னெடுப்பதற்காக அவை பொலிசிலோ அல்லது காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்திலோ முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம். எவ்வாறாயினும், அரச முகவர்கள் பதிற்செயற்பாடற்றவையாகவும் தொடர்பாடல் அற்றவையாகவும் இருக்கலாம் என்பதுடன் செயற்திறன் மிக்க பின்தொடல் நடவடிக்கையிலும் ஈடுபடாதிருக்கலாம். இது குடும்பங்களுக்கு மிகவும் அதிருப்தியளிப்பதாக இருக்கலாம்.

களத்தில் விசாரணைகளை அவதானித்தல்:
அகழ்வுச் செயன்முறையினைக் குடும்பங்கள் அவதானிக்க விரும்பலாம். குடும்பங்கள் பல காரணங்களினால் இதனைச் செய்வதற்குத் தீர்மானிக்கலாம். மேலும், அவ்விடத்திற்குச் சென்று எலும்புக்கூடுகள் தோண்டியெடுக்கப்படும் வலி மிக்க காட்சியினைக் காண்பதையும் தாண்டியே அவர்கள் இத்தீர்மானத்தினை எடுக்கின்றனர். இக்குடும்பங்கள் அவ்விடத்திற்கு வந்திருக்கின்றன என்ற விடயமே அவ்விடத்தில் இருப்பவர்கள் மிகுந்த கவனம் எடுப்பதற்கும் மனிதப் பெறுமதியை அறிவதற்குமான தார்மீகப் பொறுப்பினை அவர்கள் மீது சுமத்துகின்றது.

இது செயன்முறையில் பாரிய வெளிப்படைத்தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றது. இது பதிலாகச் செயன்முறையின் நம்பகத்தன்மையினை வலுப்படுத்துகின்றது. உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள சில குடும்பங்கள், இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்தில் துக்கம் காப்பதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்டவர்ளுக்காக, அகழ்வு தொடங்குவதற்கு முன்னர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுக் கிரியைகளையும் நிறைவேற்றுகின்றனர், அத்துடன் விசாரணையாளர்களுக்கு உதவியும் செய்கின்றனர்.

வழக்கினை முனைப்பாகப் பின்தொடரல்:
சில குடும்பங்கள் வழக்கில் நேரடியாகச் சம்பந்தப்படாமல் இருப்பதற்கு விரும்பலாம். அவை மாறாக ஊடகங்களின் மூலமாகவும் சிவில் சமூக நிறுவனங்கள் மூலமாகவும் அல்லது வழக்கில் நேரடியாகச் சம்பந்தப்படக் கூடிய காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் சங்கங்கள் மூலமாகவும் வழக்கினைப் பின்தொடரலாம். வழக்கு முன்னெடுக்கப்படும் விதம் தொடர்பாகக் கரிசணை கொண்டுள்ள குடும்பச் சங்கங்கள் பகிரங்கக் கூற்றுக்களை வெளியிடலாம் அல்லது ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்யலாம்.

அடையாளப்படுத்தலுக்காகக் குடும்பங்களிடம் இருந்து டிஎன்ஏ சேகரித்தல்

காணாமல் ஆக்கப்படுதல் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான பல்வேறு நாடுகளின் முயற்சியில் உள்ள பிரதான செயற்பாடு, காணாமல் போனவரினதும் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரதும் குடும்பங்களிடம் இருந்து டிஎன்ஏ இனைச் சேகரிப்பதாகும். விசாரிக்கப்படும் சில குறிப்பிட்ட வழக்குகளுக்காகத் தேவைப்படும் டிஎன்ஏ சேகரிப்புக்கு அப்பால், அவ்வாறான சூழமைவுகளில், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களிடம் இருந்தான டிஎன்ஏ இனையும் மனித எச்சங்களில் இருந்தான டிஎன்ஏ இனையும் கொண்ட டிஎன்ஏ வங்கியொன்றினை உருவாக்குவதற்காக அரச முகவர்களும் சிவில் சமூக அமைப்புக்களும் பணியாற்றுகின்றன.

சில இரகசியப் புதைகுழி விசாரணைகள் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய அதிகமான தகவல்களை வழங்காத காரணத்தினால் அடையாளப்படுத்தலில் இது மிகவும் பயன்மிக்கதாகும். எனவே, மனித எச்சங்களின் டிஎன்ஏ இனைக் குடும்ப டிஎன்ஏ மாதிரிகளின் பாரிய அளவுக்கு எதிராக ஒப்பிடுவது சாதகமான பெறுபேற்றினை வழங்கலாம். கடத்தப்பட்டவர்கள் வேறு இடங்களிலுள்ள தடுப்பு மையங்களுக்குப் பல வாரங்களாக அல்லது பல மாதங்களாக நகர்த்தப்பட்டு அதன் பின்னர் கொல்லப்பட்டு வேறு எங்கோ புதைக்கப்படும் சூழமைவுகளில் இது குறிப்பாக முக்கியமானதாகும். இவ்விதம், டிஎன்ஏ இனைத் தானம் செய்த குடும்ப உறுப்பினர் இறந்தாலும் கூட, தமது அன்புக்குரியவர்களைத் தேடும் முயற்சியில் அவர்கள் தொடர்ந்தும் உதவுகின்றனர்.

விசாரணைச் செயன்முறையின் போதான உளசமூகச் சவால்கள்

விசாரணைச் செயன்முறையின் வெவ்வேறு கட்டங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு உணர்வு ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிகக் கடினமானதாக இருக்க முடியும். இந்தச் சாத்தியமுடைய நிலைமைகளையும் சாத்தியமான உணர்வுகளையும் எதிர்பார்ப்பது அவற்றினை எதிர்கொள்வதற்குச் சில குடும்பங்களைச் சிறந்த முறையில் தயார்படுத்துவதற்கு உதவலாம். முன்னைய பிரிவில் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள சாத்தியமான உணர்வு ரீதியான சவால்களுக்கு மேலதிகமாகச் செயன்முறையில் குடும்பங்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் இருக்கலாம்:

தாமதங்கள்: இரகசியப் புதைகுழி விசாரணைகள் நீண்ட காலம் எடுக்கலாம். பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தினைக் குடும்பங்கள் அவசரமாக அறிந்துகொள்ள விரும்புகையில், விசாரணைச் செயன்முறையோ பல மாதங்களை எடுக்கலாம் அல்லது சில வேளைகளில் அதை விடக் கூடவும் எடுக்கலாம். மனித எச்சங்களுக்கு எதிராக ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகக் குடும்பங்களிடம் இருந்து டிஎன்ஏ இனைப் பெற்ற பின்னரும் கூட, பரிசோதனைகளில் தாமதங்கள் காணப்படலாம். உதாரணமாக, எலும்புகளில் இருந்து சேகரிக்கப்பட்ட டிஎன்ஏ தரம் குறைவானதெனக் கண்டறியப்பட்டால். நடைபெற்று வரும்

சில வழக்குகளில், புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து பல வருடங்கள் கழிந்துவிட்டன, ஆனால் இவ் இரகசிய புதைகுழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் மோதலுடன் தொடர்புடைய காணாமல் ஆக்கப்படலுடன் தொடர்புடையவையா என்பது தொடர்பான முடிவான கண்டறிதல்களை இந்த வழக்குகள் இன்னும் வழங்கவில்லை. உதாரணமாக, மன்னார் சதொச பாரிய மனிதப் புதைகுழி 2018 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாகவே அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன என்றாலும் 5 வருடங்கள் கழிந்த பின்னர் இன்னும் விசாரணைகள் நடைபெற்றே வருகின்றன.

வலிமிக்கவை: விசாரணைகளின் போது குடும்பங்கள் இரகசியப் புதைகுழியில் உள்ள அவர்களது அன்புக்குரியவர்கள் பற்றிய அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாதுள்ள உடல்கள் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கேட்க நேரிடலாம். காணாமல் ஆக்கப்படல் அதீதமான அளவு அரசியல்மயமாக்கப்பட்டுள்ள விடயமாகும். எனவே, இரகசியப் புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ள நபர்கள் வெவ்வேறு ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் அல்லது அவற்றுடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படலாம்,

இவ்வாறான கருத்துக்கள் உண்மையற்றவையாக இருக்கலாம். தமது அன்புக்குரியவர்கள் தம்மை அப்படியே கைவிட்டு விட்டு வேறு எங்கோ வாழ்கிறார்கள் எனக் கூறுவதன் மூலம் அன்புக்குரியவர்களின் காணாமல் ஆக்கப்படல் பற்றிய உத்தியோகபூ ர்வக் கூற்றினைக் குடும்பங்கள் வெளியிடாதிருக்க அவர்களை நிர்ப்பந்திக்கும் இரக்கமற்ற அல்லது குரூரமான அரசாங்க அதிகாரிகளையும் இக்குடும்பங்கள் கையாள வேண்டியிருக்கின்றது. சில வேளைகளில் இவ்வாறான கருத்துக்கள் நீதிமன்றத்தில் அப்படியே ஒப்புவிக்கப்படுவதுடன் ஊடகங்களிலும் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

குடும்பங்களுக்கான உதவி

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஏனைய குடும்ப உறுப்பினர்கள், சமயக் குறவர்கள், ஆற்றுப்படுத்துனர்கள், அல்லது உளசமூக நிபுணர்கள், விசாரணை அணி உறுப்பினர்கள் மற்றும் இரகசியப் புதைகுழி விசாரணையுடன் நெருக்கமான ஏனையோர் என அனைவரும் இந்தச் சவால்மிக்க செயன்முறையின் ஊடாகக் குடும்ங்களுக்கு உதவுவதில் ஒரு வகிபாத்திரத்தினை வகிக்க முடியும்.

தகவல்களுக்கான அணுகல், பங்குபற்றுவதற்கான அர்த்தபூர்வமான வாய்ப்புக்கள், சமய மற்றும் கலாசாரச் சடங்குகள், சமூக உதவி மற்றும் கடினமான உணர்வுகள் மற்றும் சமூக இயங்கியலைக் கையாண்டு சமாளிப்பதற்கான அவகாசம் மற்றும் நிபுணத்துவமிக்க மனநல சேவைகள் என அனைத்துமே இரகசியப் புதைகுழி விசாரணையின் கடினமான செயன்முறையினைக் கடப்பதற்குக் குடும்பங்களுக்கு உதவும்.

குடும்பங்களுக்கு உதவியினை வழங்குபவர்கள் அவர்களுக்கு உதவுவதற்கான செயற்திறன்மிக்க வழிகளுக்கான சாத்தியத்தினை மீளாய்வு செய்வது முக்கியமானதாகும். சில தனிநபர்களுக்குத் தொழில்முறையான ஆற்றுப்படுத்தல் தேவைப்படலாம் என்பதுடன் உதவியின் பல்வேறு வடிவங்களை நோக்குவதும் முக்கியமானதாகும்:

- **வழக்குத் தொடர்பான இற்றைப்படுத்தல்கள்:** விசாரணை செய்யும் முழுச் செயன்முறையுமே குழப்பமிக்கதாக இருக்கலாம். என்ன நடக்கின்றது என்பதைத் தொடர்ந்து அறிந்துகொள்ளலும் வெவ்வேறு சட்டப் பிரச்சினைகள் மற்றும் தொழில்நுட்பச் செயன்முறைகளைப் புரிந்துகொள்வதும் மிகக் கடினமானதாக இருக்கலாம். குடும்பங்களுடன் பணியாற்றுபவர்கள் குடும்பங்களுக்குத் தகவல்கள் ஒழுங்காக வழங்கப்படுகின்றன மற்றும் இற்றைப்படுத்தல்கள் புரிந்துகொள்வதற்கு இலகுவான முறையிலும் உரிய நேரத்திலும் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான வகிபாத்திரத்தினைக் கொண்டுள்ள இது ஒரு முக்கியமான பரப்பாகும்.
- **குடும்பங்களின் மத்தியில் விழிப்புணர்வினை அதிகரித்தல்:** இந்த நூலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இரகசியப் புதைகுழிகள் பற்றிய விசாரணைகள் எவ்வாறானதக இருக்கும் என்பது பற்றிய மிகக் குறைவான தகவல்களே காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கு அணுகக் கூடியதாக உள்ளது. மேலும், இந்த விடயம் தொடர்பிலும் தேடலில் அதன் முக்கியத்துவம் பற்றியும் பெருமளவான கலந்துரையாடல்கள் நடைபெறுவதில்லை என்பதுடன் விழிப்புணர்வு உருவாக்கமும் நடைபெறுவதில்லை. காணாமல் போதல் தொடர்பாகப் பணியாற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் ஏனையோரும் வெவ்வேறு வடிவிலான வழிகள் மூலம் அதிகரித்த விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு உதவலாம். இதனால் பிரச்சினையினைக் கையாளுவதற்குக் குடும்பங்கள் மிகச் சிறந்த தயார் நிலையில் இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து டிஎன்ஏ மாதிரிகளைச் சேகரிப்பதுவும் ஒரு முக்கியமான பரப்பாகும்.
- **வழக்கில் சட்ட ரீதியாக இடையீடு மேற்கொள்ளல்:** சில குடும்பங்கள் வழக்கில் சட்ட ரீதியாக இடையீடு மேற்கொள்வதற்கு விரும்பலாம். எனவே, மிகக் குறைந்த கட்டணத்தினைப் பெற்றுக்கொண்டு அல்லது கட்டணம் பெறாது வேலை செய்யக்கூடிய பொருத்தமான சட்டத்தரணிகளை அடையாளம் காண்பதற்கும் வழக்கில் குடும்பத்தினரிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பது பற்றிக் குடும்பங்களுக்கு அறியத் தருவதற்கும் நண்பர்கள் குடும்பங்களுக்கு உதவுவது முக்கியமானதாகும். இவ்வாறான வழக்குகளைப் பொறுப்பேற்கும் சட்டத்தரணிகள் செயன்முறையினைக் குடும்பங்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டும் என்பதுடன் குடும்பங்களுக்குக் கிரமமான இற்றைப்படுத்தல்கள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- **பங்கேற்பில் உதவுதல்:** முன்பு குறிப்பிடப்பட்டதைப் போன்று,

பங்கேற்பு என்பது பல வடிவங்களை எடுக்கலாம் என்பதுடன் பங்கேற்க விரும்பும் குடும்பங்களுக்கு அல்லது கட்டாயம் சம்பந்தப்பட வேண்டியிருக்கும் குடும்பங்களுக்கு அவற்றிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை விளக்குவது முக்கியமானதாகும். உதாரணமாக, குடும்பங்கள் விஜயம் செய்ய விரும்புகையில், அவ்விஜயத்தினை அவர்கள் முகாமைத்துவம் செய்வதற்காக இயலுமான அளவு அவர்களைத். தயார்படுத்துவதற்காக அக்குடும்பங்களுடன் வேலை செய்பவர்கள் செயன்முறையினைப் பற்றியும் புதைகுழி அமைந்துள்ள இடம் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் அவர்கள் உணரக் கூடிய உணர்வுகள் பற்றியும் விளக்குவது பயன்மிக்கதாக அமையும். சட்ட ரீதியாக இடையீடு மேற்கொள்ள விரும்பும் குடும்பங்களைப் பொறுத்த அளவில், சட்டத்தரணியாகப் பணியாற்ற இருப்பவர்கள் செயன்முறையினப் பற்றி விளக்க வேண்டும் என்பதுடன் வழக்குகள் தொடர்ந்து நடைபெறுகையில் அவற்றின் முன்னேற்றம் பற்றி இவ்வாறான குடும்பங்களுக்குத் தொடர்ச்சியாக அவர்கள் இற்றைப்படுத்தலை வழங்குவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

- **உடனிருத்தல்:** விசாரணையின் முக்கியமான கட்டங்களின் போது ஏனையோர் உடனிருத்தலைக் குடும்பங்கள் மிகவும் பயன்மிக்கதாகக் காணலாம். உடனிருப்பவர்களுள் நண்பர்களும் சமுதாய மட்ட அமைப்புக்களில் பணியாற்றும் தனிநபர்களும் அல்லது ஏனைய காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களும் உள்ளடங்கலாம். இவர்கள் கடினமான செயன்முறைகளின் போது குடும்பங்களுக்குத் துணையாக இருப்பதற்கு உதவலாம். உதாரணமாக,இரகசிய புதைகுழி அமைந்துள்ள இடத்திற்கு விஜயம் செய்த பின்னர், தமக்கு ஏற்பட்ட அனுபவத்தினைப் பற்றி நம்பிக்கைக்குரிய நபர் ஒருவருடன் அமர்ந்து பேசுவதைச் சில குடும்பங்கள் பயன்மிக்கதாகக் காணலாம்.

- **சமுதாயத் தயார்படுத்தல்:** காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்குப் பரந்த சமுதாயத்தின் உதவி இல்லாதிருக்கலாம், மேலும் இரகசியப் புதைகுழி விசாரணைகளில் பங்குபற்றுவதற்கு அவர்கள் முயற்சிக்கையில் மற்றும் எச்சங்கள் கையளிக்கப்பட்டதும் கிரியைகளை நடத்துவதற்கு முயற்சிக்கையில் அவர்கள் இழுக்குக்கும் அல்லது எதிர்ப்புக்கும் முகங்கொடுக்கலாம். குடும்பங்களின் மத்தியில் கூட்டொருமையினை உருவாக்குவது முக்கியமானதாகும். இதனால் அவை தமது அன்புக்குரியவர்களுக்கான கிரியைகளை நடத்த முயற்சிக்கையில் அதிகமான உதவி வழங்கப்படுவதை உணர்வர்.

  இந்த விடயம் தொடர்பில் சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வேற்படுத்துவதைப் பொறுப்பேற்பது முக்கியமானதாகும். நினைவுகூர்வதற்காகக் குடும்பங்கள் கிரியைகளை நடத்த விரும்புகையில் அல்லது தமது அன்புக்குரியவர்களை அடக்கம் செய்கையில், உதவி வழங்குவதற்கு முன்வராதிருக்கும் சமயத் தலைவர்களுடனும் சமுதாயத் தலைவர்களுடனும் மத்தியஸ்தம் செய்வதற்கு அவர்களுக்கு ஏனையோரின் உதவி தேவைப்படலாம்.

- **ஆதரித்துவாதாடல்:** குடும்பப் பங்கேற்பு என்பது ஒரு பரந்த கோட்பாடு என்ற ரீதியிலும் தனிப்பட்ட வழக்குகளில் அதன் அமுல்படுத்தலிலும் பகிரங்க ஆதரித்து வாதாடலைத் தேவைப்படுத்தும் விடயங்களாகும். கொள்கை மட்டத்திலான அங்கீகாரத்தின் மூலமாக தனிப்பட்ட வழக்குகளில் இதனைப் பிரயோகிப்பது இலகுவானதாக இருக்கும். சமகாலத்தில், வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள், குறிப்பாகச் சட்டத்தரணிகள், அவதானிப்புக்கான உரிமைகள் அமுல்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- **ஆற்றுப்படுத்தல்:** திரண்டெழும் உணர்வு ரீதியான சுமைகளைக் கையாளுவதற்கு ஓர் ஆற்றுப்படுத்துனரின் உதவி சில குடும்பங்களுக்குத் தேவைப்படலாம். சில வேளைகளில், இந்த உணர்வு ரீதியான வலி உடல் சார்ந்தும் வெளிப்படலாம், இதில் மூச்செடுக்க முடியாமை, தலைவலி அல்லது உடலின் ஏனைய பாகங்களில் வலி போன்றவை உள்ளடங்கலாம். இவர்கள் எவ்வாறு உணர்கின்றனர் என்பதைப் பற்றி அறிந்து அவர்களுக்கு உதவுவதற்கும் அவர்களுக்கு ஏற்படும் மனக்குழப்பமிக்க உணர்வுகள் மற்றும் சிந்தனைகளை முகாமைத்துவம் செய்வதற்கு உதவுவதற்கும் ஓர் அனுபவமிக்க ஆற்றுப்படுத்துனரை அடையாளம் காண்பது முக்கியமானதாகும்.

மூலங்கள்

International Committee of the Red Cross
Accompanying the Families of Missing Persons,
A Practical Handbook, March 2013

International Committee of the Red Cross
The Forensic Human Identification Process:
An Integrated Approach, January 2022.

International Commission on Missing Persons
Resolving the Missing Persons Issue in the
Western Balkans, A Q&A and Topical Issue.

International Commission on Missing Persons
Family Rights, A Short Guide for
Families of the Missing.

The Bouremouth Protocol on Mass Grave
Protection and Investigation, 2020.

ஏற்புரை

Fundacion de Antropologia Forense de Guatemala (FAFG) அமைப்பின் நன்கொடை மற்றும் அறிவுப் பகிர்வின் காரணமாகவே இவ்வெளியீடு சாத்தியமானது. இச்செயற்திட்டத்துக்கும் இந்த வெளியீட்டுக்கும்; சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (Law & Society Trust) அதன் பூரண ஆதரவை வழங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. அத்துடன் இதற்காக என்னுடன் பக்கபலமாக இருந்த பிரசன்ன கஜவீர, சந்துன் துடுகல மற்றும் சகுந்தலா கதிர்காமர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உள்ளடக்கத்தில் இருக்கக்கூடிய துல்லியமின்மை மற்றும் குறைபாடுகளைக் கண்டறிவதற்காக உதவிய க்ளோடியா ரிவேரா மற்றும் சாரி எப்பள் ஆகியோருக்கு நன்றிகள். இச்செயற்திட்டத்துக்காக நீங்கள் காட்டிய ஆர்வம் உள்ளத்தை நெகிழ வைக்கின்றது. ஆனந்த கலப்பத்தி, உளச்சமூகக் கூறுகள் பற்றிய விடயங்களை மாத்திரம் எனக்குள் புகுத்தாமல் எனது பதிப்புருவினை மாற்றியமைப்பதற்கும் உதவியதுடன் மனநலச் சுகாதார மற்றும் உளசமூக ஆற்றுப்படுத்துனர்களுடன் பதிப்புருவினை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களையும் எனக்குப் பெற்றுத் தந்தார். எனது பதிப்புருவினைப் பகிர்ந்தமைக்காவும் அது பற்றிய பின்னூட்டலை வழங்கியமைக்காகவும் நான் அமரா ஹப்புவாரச்சி, மரிலின் வேவர், சரளா இமானுவேல் மற்றும் விசாக்கா தர்மதாச ஆகியோருக்கு எனது விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாரிய வேலைப்பளுவுக்கு மத்தியிலும், வேதனையும் வலியும் மிக்க இவ்விடயத்தை வாசகர்களால் இலகுவில் அணுகக்கூடிய வகையில் கையாளும் பொறுப்பை சன்னி பெரேரா ஏற்றிருந்தார். விளக்கப்படங்கள் மற்றும் பக்க வடிவமைப்பை மேம்படுத்துவதற்காக துலன எத்துகல ஆற்றிய பணிக்காக நான் மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். பதிப்புருவினைச் சீர்ப்படுத்துவதற்கு நேரம் எடுத்துக் கொண்டமைக்காக லியானா பீரிசுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். சிமெனா லண்டனோ, டீரன் உயங்கொட மற்றும் நைஜெல் நுகவெல ஆகியோரின் ஆலோசனை மற்றும் ஆதரவுக்கு நன்றிகள். எனக்கான ஊக்கத்தையும் சிந்தனையையும் பல நூல்கள் எனக்கு வழங்கின. அதில் சிலவற்றை நான் குறிப்புக்களில் பட்டியலிட்டுள்ளபோதும் எனது முன்னாள் சகாக்களான சஜினி பெர்னான்டோ மற்றும் அருணி ஜயக்கொடி ஆகியோருடன் இணைந்து இலங்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டே நான் இப்பணியை முன்னெடுத்தேன் என்பதனை இங்கு விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வெளியீட்டின் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களின் பிரதிகளுக்காக என்னுடன் இணைந்து பணியாற்றிய மொழிபெயர்ப்பாளர்களான மொஹமட் பிக்ரி மற்றும் டொக்டர் கங்கா ரஜினி திசாநாயக்க ஆகியோருக்கு பெரும் நன்றிகள். புதிப்புருவைச் சுருக்கமாகவும் அணுகக்கூடிய வகையிலும் உருவாக்குவதற்கென நீங்கள் செலவிட்ட நேரத்தையும் எடுத்த முயற்சியையும் நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். பதிப்புரையினைப் பரிசீலித்தமைக்காக எனது வாசகர்களுக்கும் நன்றிகள்: நெஹாமா ஜயவர்தன, அசோக்க பியரத்ன, டொக்டர் பொன்னி அரசு, கே.வேந்தன், குறிப்பாக டொக்டர் தனுஜா துரைராஜா.

புதிப்புரையில் ஏதேனும் தவறுகளோ அல்லது பிழைகளோ இருப்பின் அவை என்னுடையவை மட்டுமேயாகும். ஏதேனும் கருத்துக்களை அல்லது பரிந்துரைகளை நீங்கள் பகிர விரும்பின், தயவுசெய்து எனக்கு மின்னஞ்சலிடவும் **mirakraheem@yahoo.com**

எழுத்தாளரைப் பற்றி:

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் காணாமற்போனோர் பற்றிய தேடலை வலுவூட்டுவதற்கான வழிகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்தி வரும் ஒரு சுயாதீன ஆய்வாளராக மிராக் ரஹீம் செயற்பட்டு வருகின்றார். காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் ஆணையாளரான (2018–2021) இவர் நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஆலோசனைச் செயலணியின் உறுப்பினராகவும் (2016) செயற்பட்டுள்ளார்;.

LAW & SOCIETY TRUST